**இமாம் ஜவாத் அலைஹிஸ்ஸலாம்**

# வெளியீட்டுரை

தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் இஸ்லாத்தின் பரம்பலில் இஸ்லாமிய மெய்ஞானிகள், ஆத்மஞானிகளின் பங்களிப்பு மறக்க கூடியதன்று, உலகப் பற்றைத் துறந்து இறைஞானங்களைப் போதித்து வாழ்வதையே தம் முழு மூச்சாகக் கொண்டிருந்த இப் பெருந்தகைகள் தமது பரிசுத்த எண்ணங்கள், மற்றும் அப்பழுக்கற்ற முன்மாதிரிகளால் பெரும் வெற்றிகளை ஈட்டியதோடு வரலாற்றிலும் நீங்கா இடம்பிடித்துள்ளனர்.

இத்தகைய ஞானிகள் பெறும்பாலானோறின் அல்லது அவர்களது ஆசான்களின் சந்ததிக் கோடு அமீருல் முஃமினீன் இமாம் அலீ இப்னு அபீதாலிபைச் சென்றடைகின்றது. அங்கிருந்த ஹஸரத் பாத்திமா நாயகி ஊடாக பரிசுத்த இறைதூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களை அடைகின்றது.

உங்கள் கையில் தவழும் இச்சிறு நூல் இமாம் ஜவாத் அவர்களது வரலாற்றைச் சுருக்கமாக ஆராய்கிறது. இமாம் அலீ இப்னு மூஸா அல்றிழா அவர்களின் புதல்வரும் அவர்களது ஞான வாரிசுமாக இமாம் ஜவாத் திகழ்கின்றார்கள். இமாம் ஜவாதின் சிறப்புகளை இந்நூல் சுருக்கமாகத் தரமுனைகின்றது.

பல்வேறு சூபியாக்களின் ஞான ஆசிரியர்கள் வரிசையில் வரும் மிக முக்கியமான ஒருவர் பக்தாதில் அடங்கியிருக்கும் பெரியார் மஃரூபுல் கர்ஹீ ஆவார். சிலவேளை, அன்னாரது குறிப்பிடப்படுவதுண்டு, எனினும், வாஸ்தவத்தில் மஃரூபுல் கல்ஹீ அவர்கள், இமாம் றிழாவின் மிக முக்கிய சீடர்களில் ஒருவராவார். இமாமின் உண்மையான வாரிசு இமாம் ஜவாத் அவர்களேயாகும். இந்த உண்மையை ஓரளவுக்குத் தொட்டுக் காட்ட முனைகிறது இச்சிறு நூல்.

ஞானி மஃரூபுல் கல்ஹி பற்றி ஏராளமான ஆய்வுகள் உள்ளன. 'இமாம் றிழாவின் சீடரும் ஞானிகளின் ஆசானுமாகிய பெரியார் மஃரூபுல் கர்ஹீ' எனும் தலைப்பில் அரபு மொழியில் அஷ்ஷெய்க் காசிம் தஹ்ரானீ எழுதி லெபனானில் வெளியடப்பட்ட நூல் மிகப் பயனள்ளதாகும்.

ஆக, இமாம் றிழா அவர்களின் உண்மையான ஞான வாரிசான இமாம் ஜவாத் தமிழுலகுக்கு அறிமுகமாவது இது முதல் தடவையாக இருக்கலாம். இம்முயற்சி எல்லோருக்கும் பயனளிக்கும் என்பது எமது அசையாத நம்பிக்கை.

**வெளியீட்டாளர்கள்.**

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.*

## முன்னுரை

முழு பிரபஞ்சத்திலும் வியப்பும் வனப்பும் மிக்க ஒரு சம்பவம் உண்டு எனில் அது இப்பூமியில் மனிதன் இறைவனுடைய பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட வரலாறாகும். ஆழமாக நாம் ஆய்வு செய்யுமிடத்து, ஏனைய படைப்புகளை விட மனிதன் சிறப்புப் பெறுவது இந்த தனித்துவமான சிறப்பை காரணமாகக் கொண்டே என்பதை புரிந்து கொள்ள முடியும். இது ஒரு மாபெரும் கொடையாகும். முனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாக (கலீபத்துல்லாஹ்) இருப்பதுதான் அந்த சிறப்பு.

ஹாபிஸ் ஷீராஸி அவர்கள் தமது கவிதையொன்றில் இவ்வாறு கூறுகின்றார், 'இந்தப் பொறுப்பைச் சுமப்பதற்கு வானமும் கூட முன் வரவில்லை. எனவே, திருவுளச்சீட்டு மூலம் எனது பெயர் விழுந்து விட்டது. நான் ஓர் அறிவிலி.'

இறைஞானம் மற்றும் மனிதனது ஆத்மீக வரலாற்றில்,நபி ஆதம் அலைஹிஸ் ஸலாம் தொடக்கம் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வரையுமான அல்லாஹ்வின் தூதர்களும் இமாம் அலீ அலைஹிஸ் ஸலாம் தொடக்கம் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் வரையுமான பரிசுத்த இமாம்கள் அனைவரும் அறிவு, ஞானம், பொறுப்பு என்பவற்றின் களஞ்சியங்களை தம்முள்ளே பொதிந்து கொண்ட உறுதியான பிரமாண்டமான மலைகளைப் போன்று வலிமையோடு உயர்ந்து விளங்கினார்கள். அவர்கள் அல்லாஹ்வுக்கும் ஏனைய படைப்பினங்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்தினார்கள். பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதித்துவமெனும் தெய்வீக அமானிதத்தைப் பாது காப்போராகவும் திகழ்ந்தார்கள்.

ஆத்மீகப் பரிபக்குவத்தில் உச்சகட்டத்தை எயிதியோரின் தொடரிலுள்ள இப்பெரிரியார்கள் எல்லா சிருஷ்டிகளிலும் மிகவும் சிறப்புக்குரியோராகவும், அல்லாஹ்வுக்கு மிக நெருக்கமானோராகவும் உள்ளனர். அவர்களது முன்மாதிரி, எல்லோராலும் பின்பற்றத் தக்கதாகும்.

அவர்களில் எவரது வாழ்க்கையும் தத்தமது காலத்துக்குரிய சாதாரண ஒன்றாக அமைந்திருக்கவில்லை. பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகமான வியப்பையும் ஆச்சரியத்தையும் அவை கொண்டிருந்தன. ஏனனில் அவர்கள் இவ்வுலகுக்கு அப்பாலுள்ளவை பற்றி அறிவு ஞானங்களைக் கொண்டிருந்தனர், மேலும் அவர்களது சொல்லிலும் செயலிலும் தெய்வீக தன்மை மலிர்ந்தது.

நபி நூஹ் அலைஹிஸ் ஸலாம் இத்தரணியில் சுமார் தொள்ளாயிரத்து ஐம்பது வருடங்கள் வாழ்ந்து நபியாகவும் இருந்து பணி செய்தார்கள். இறுதியில் அல்லாஹ் அவர்களது விரோதிகள் மீது வெள்ளத்தை அனுப்பினான். அதன் மூலம் அவர்களை மூழ்கடித்தான். மற்றும் ஹஸரத் ஹூத் அலைஹிஸ் ஸலாம் , ஹஸரத் ஸாலிஹ் அலைஹிஸ் ஸலாம் போன்ற நபிமார்களை நிராகரித்து, அவர்களது நபித்துவத்தை மறுத்துரைத்த கூட்டத்தார்மீது அல்லாஹ் வானத்திலிருந்து தண்டனை இறக்கி வைத்தான்.

மேலும் நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் ஈசல்கள் போல நெருப்பில் வீசப்பட்ட போது அல்லாஹ்வின் கட்டளையால் அது குளிர்ச்சியாவும் பாதுகாப்பானதாகவும் மாறியது, நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் வைத்திருந்த தடி பாம்பாக மாறி பிர்அவ்னின் சூழ்சிகளை முறியடித்தது. நபி சுலைமானுக்கு காற்று வசப்படுத்திக் கொடுக்கப்பட்டது, பறவைகளோடும் அவர்கள் பேசினார்கள். நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் மரணித்தவர்களை அல்லாஹ்வின் அனுமதியோடு உயிர்பெறச் செய்தார்கள்.

எங்கள் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அதிகமான அற்புதங்களைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பிறந்த போது மக்காவிலுள்ள சிலைகள் தகரந்ததன. ரோம் பேரரசின் கோட்டையின் பதினான்கு மாடங்கள் சரிந்தன பாரசீகத்து அணையா நெருப்பு அணைந்தது. அவர்களது காலத்தில் உலகம் புரட்சிகரமான மாற்றத்துக்கு புதியதோர் மனித சமுதாயம் ஆரம்பமானது.

வாஸ்தவத்தில் உலக வரலாற்றில் வியக்க வைக்கும் சம்பவம், மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாகத் தோன்றிய கதையாகும்.

அல்லாஹ்வின் தூதர்கள் எந்த ஆசானிடமும் கால் மடக்கி கல்வி கற்றவர்கள் அல்லர் மாறாக தெய்வீக அருள் ஞானத்தின் நித்திய ஊற்றில் இருந்து அவர்கள் ஞானவருள் பெற்றார்கள்...

கல்வி ஞானங்களைத் தேடிக் கற்றுக் கொள்ளும் அவசியம் கிடையாது என்ற சிறப்பம்சம் காரணமாக தூதுவத்தைச் சுமப்பதிலோ பொறுப்பேற்பதிலோ வயதுக் கட்டுப்பாடு செல்வாக்குச் செலுத்த வில்லை. மனிதர்களுக்கு நேர்வழியைக் காட்டுவதற்கும், நுபுவ்வத்தை உறுதிப்படுத்துவதற்கும் சிறுவர்கள், நடுத்தர வயதுள்ளவர்கள், வாலிபர்கள், வயோதிபர்கள் என பலதரப்பட்ட வயது வித்தியாசங்களைக் கொண்டோர், இறை நாட்டத்தின் படி இறைத்தூதர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

நபி யஹ்யா அலைஹிஸ் ஸலாம் நுபுவத் வழங்கப்பட்ட போது சிறுவராக இருந்தார். தொட்டில் வயதில் நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் நபியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

*அல்லாஹ் கூறுகிறான்*

'யஹ்யாவே! நீர் வேதத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்வீராக மேலும் நாம் சிறுவராக இருக்கும் போதே அவருக்கு ஞானத்தை வழங்கியிருந்தோம்' [1]

*மேலும் கூறுகிறான்*

'தொட்டிலில் இருக்கும் குழந்தையுடன் நாங்கள் எப்படிப் பேசுவது என அவர்கள் கேட்டனர். உடனே (குழந்தையாக இருந்த ஈஸா) கூறினார், 'நான் அல்லாஹ்வின் அடியான் ஆவேன். அவன் எனக்கு வேதம் தந்து என்னை தூதராகவும் ஆக்கினான்' [2]

நபிமார்களில் சிலரை ஒத்த விதத்தில் தமது சிறுவயதிலேயே இமாமத் பொறுப்பை அடைந்து கொண்டோருள் உள்ளனர். குறிப்பாக இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் எட்டாவது அல்லது ஒன்பதாவது வயதில் உள்ள போது எவ்வாறு இமாமத்தை அடைந்து கொள்ள முடியும்?' என்று கேள்வியெழுப்புகின்றவர்களும் உள்ளனர். இதன் சாத்தியம் பற்றி அல்குர்ஆன் பிரஸ்தாபித்து இத்தகைய கேள்விகளின் அடிப்படையற்ற தன்மையை தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது.

இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் தமது தகப்பனாரின் மரணத்திற்குப் பின்பு இமாமத்தையும் இப்பூமியிலான அல்லாஹ்வின் பிரதிநிதித்துவத்தையும் பொறுப்பேற்றார்கள். இது முன்சென்ற இமாம்களின் தெளிவான அறிவுறுத்தலின் பிரகாரம் நடந்த விடயமாகும்.

சிறுவர் என்பதால் அறிவிலிகளினாலும், பகைவர் கூட்டத்தினராலும் ஏற்பட்ட அனைத்து எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுக்க முன்வந்தார் இமாம் ஜவாத் தெய்வீக ஞானப் பொக்கிஷத்தில் இருந்து ஊற்றெடுத்த அறிவு மூலம் அத்தகையோரை வாயடைக்கச் செய்தார்கள். அல்லாஹ்வின் திரு வசனங்களை ஓதிக் காண்பித்து, நபி யஹ்யா அலைஹிஸ் ஸலாம் நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் ஆகியோர் சிறுவர்களாக இருக்கும் போதே, இஸ்லாத்தைப் போதிக்கும், வழிகாட்டும், பொறுப்பைச் சுமந்த உண்மையையும் எடுத்துரைத்தார்கள்.

## பிறப்பு

எட்டாவது இமாமாகிய அலீ இப்னு மூஸா அல்றிழா அவருக்கு நாற்பது வயதை தாண்டிய பிறகும் ஆண் குழந்தை கிடைக்க வில்லை. இவ்விடயம் அல்லுல்பைத் நேசர்களுக்கு மிகுந்த கவலையையும் கலக்கத்தையும் தந்தது.

ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி மற்றும் அஹ்லுல்பைத் இமாம்களினதும் கருத்துப்படி ஒன்பதாவது இமாம், எட்டாவது இமாமின் மகனாவார் என்று அவர்கள் உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால், இமாமவர்களுக்கு ஒரு குழந்தையை அல்லாஹ் வழங்கும் வரை பொறுமையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சில சமயம், இமாம் றிழாவிடம் மக்கள் சென்று குழந்தையொன்று கிடைக்க பிரார்த்தனை செய்யுங்கள் எனக் கூறுவர் அப்போதெல்லாம் இமாம் 'நிச்சயமாக அல்லாஹ் எனக்கு ஆண் குழந்தையொன்றைத் தருவான். அவரே எனது பிரதிநிதியாகவும் எனக்கப் பிறகு இமாமாகவும் இருப்பார்' என உறுதியாக விடை கூறுவார்கள். [3]

இறுதியாக ஹிஜ்ரி 195ல் ரஜப் மாதம் பத்தாவது நாள் இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் பிறந்தார்கள்.[4] அவர்களுக்கு முஹம்மத் என பெயர் வைக்கப்பட்டது. அவர்களது குலப் பெயர் அபூஜஃபர் அவர்களது சிறப்புப் பெயர்களில் பிரபலமானவை அல் தக்கீ அல்ஜவாத் ஆகியவையாகும்.

இமாம் ஜவாதின் பிறப்பு அஹ்லுல்பைத்தினரைப் பின்பற்றுவோர் மத்தியில் மிகுந்த ஆனந்தத்தையும் மகிழ்ச்சியையும் தோற்றுவித்தது. மேலும் அவர்களது நம்பிக்கையிலும் உறுதியை ஏற்படுத்தியது. இந்த இமாமினது வருகையின் தாமதத்தினால் சில அஹ்லுல்பைத் நேசர்களின் உள்ளங்களில் ஏற்பட்டிருந்த தடுமாற்றமும் முற்றாக நீங்கியது.

இமாம் ஜவாதின் தாயார் பெயர் ஸபீக்கா என்பதாகும். இமாம் றிழா அவரை ஹைஸரான் என்றே அழைப்பார்கள்.

இவர்,நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்களின் மனைவிமார்களில் ஒருவரான மாரியதுல் கிப்திய்யாவின் [5] பரம்பரையைச் சேர்ந்த கண்ணியமிக்க பெண்மணி மிகச் சிறந்த நல்லொழுக்கமுடைய பெண்மணியாக அவர் திகழ்ந்தார்.[6] நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் மாரியதுல் கிப்திய்யாவை 'அடிமைப் பெண்களில் மிகச் சிறந்த பெண்மணி என்று அழைத்தார்கள்

இமாம் மூஸா ரிழா அவர்களது வீட்டில் மனைவியாக இப்பெண்மணி நுழையு முன்பே, இவரது சிறப்புகள், தனித்துவங்கள் சிலவற்றைப் பற்றி இமாம் மூஸா இப்னு ஜஃபர் தெளிவாகக் கூறியிருந்தார்கள். அவருக்கு தமது ஸலவாத்தைத்

தெரிவிக்குமாறு யசீத் இப்னு ஸலீத் என்ற தமது தோழரிடம் கூறி வைத்திருந்தார்கள்.[7]

இமாம் றிழாவின் சகோதரியான ஹகீமா கூறுகின்றார், இமாம் ஜவாத் பிறக்கும் போது, தமது மனைவி ஹைஸரானுக்கு அருகாமையில் அமர்ந்திருக்குமாறு எனது சகோதரர் என்னை வேண்டிக் கொண்டார்கள். இமாம் ஜவாத் பிறந்து மூன்றாவது தினத்தன்று இரு கண்களையும் திறந்து வானத்தைப் பார்த்தார். பிறகு இடது வலது பக்கமாக திரும்பியவாறு கூறினார்கள், அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரிய நாயன் வேறு யாருமில்லை. நிச்சயமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள் அல்லாஹ்வின் தூதராகும் என்று நான் தெளிவாக அறிந்து சாட்சி கூறுகின்றேன்.'

இந்த அதிசயத்தைக் கண்ணுற்ற நான் அதிர்ச்சியும் திடுக்கமம் அடைந்தேன். எனது சகோதரரிடம் விரைந்து சென்று, நான் கண்ட அதிசயத்தைப் பற்றிக் கூறினேன். அதற்கு அவர்கள், 'எதிர்காலத்தில் அவரிடம் இன்னும் நிறைய அற்புதங்களைக் காண்பீர்கள்' எனக் கூறினார்கள். [8]

அபூயஹ்யா ஸன்ஆனி கூறுகின்றார், ஒரு நாள் நான் இமாம் றிழாவுடன் இருந்த வேளையில், சிலர் இமாம் ஜவாத்தை அங்கு கொண்டு வந்தார்கள். அப்போது அவர்கள் சிறு குழந்தையாக இருந்தார்கள் இமாம் றிழா 'நாம் நேசர்களுக்கு பரக்கத் நிறைந்ததாக கூறினார்கள். இக்குழந்தை போன்று வேறு எந்தக் குழந்தையும் அமையவில்லை' [9]

இமாம் இவ்வாறு கூறியது முன்னர் நாம் சுட்டிக்காட்டிய விடயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். அதாவது இமாம் ஜவாதின் பிறப்பானது இமாம் றிழாவுக்கு வாரிசாக இல்லாமல் போய்விடுமோ என்ற, அஹ்லுல்பைத் நேசர்களின் உள்ளங்களிலிருந்து ஐயத்தை நீக்கியதுடன், சந்தேகம், தடுமாற்றம் என்பவற்றின் பாதிப்பிலிருந்து விடுபட்டு அவர்களது ஈமான் வலுப்பெறவும் காரணமாக அமைந்தது.

*நவ்பலீ கூறுகின்றார்,*

இமாம் றிழா அவர்கள் குராஸானுக்குப் பயணம் செய்த போது நான் அவர்களிடம் 'எதையேனும் எனக்கு கட்டளையிடுவீர்களாக?' என வேண்டினேன்.

அதற்கு இமாம் 'திரும்பிவர முடியாத பயணத்தில் நான் சென்று கொண்டிருக்கிறேன் எனக்குப் பிறகு எனது மகனாகிய முஹம்மதை நீர் பின்பற்ற வேண்டும்' எனக் கூறினார்கள். [10]

இமாம் றிழாவின் செயலாளராக இருந்த முஹம்மத் இப்னு அபூஇபாத் என்பவர் கூறுகின்றார், இமாம் றிழா தமது மகனின் குடும்ப பெயரைக் கொண்டே அவரை விளிப்பார்கள். இமாம் ஜவாதிடம் இருந்து ஒரு கடிதம் வந்தால், அபூஜஃபர் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்' என்றுதான் கூறுவார்கள்.

நான் இமாம் றிழாவின் இமாம் அபூஜஃபருக்கு பதில் கடிதம் எழுதும் போது, இமாம மிகுந்த கண்ணியத்துடனும் மரியாதையுடனுமே தமது மகனை நினைவு கூறுவார்கள். இமாம் ஜவாதிடமிருந்து வரும் கடிதங்கள் யாவும் இலக்கணத்திலும், மொழி அழகிலும் அதி சிறந்ததாக இருக்கும்.

முஹம்மத் இப்னு அபீ இபாத் மேலும் கூறுகின்றார், அபூஜஃபர் எனக்குப் பிறகு எனது பிரதிநிதியாகவும் எனது குடும்பமாகிய அஹ்லுல்பைத்தின் பிரதிநிதியாகவும் இருப்பார் என்று இமாம் றிழா கூறியதை நான் செவிமடுத்தேன் [11]

முஅம்மர் இப்னு ஹல்லாத் கூறகின்றார், இமாம் றிழா ஒரு விடயத்தைப் பற்றி பின்வருமாறு கூறுவார்கள் இது பற்றி என்னிடமிருந்து தான் அறிந்து கொள்ள வேணடியதில்லை இதோ அபூஜஃபர் இருக்கின்றார், நான் எனது இடத்தில் அவரை அமர்த்தியுள்ளேன். எந்தப் பிரச்சினையாயினும் எந்தக் கேள்வியாயினும் அவர் விடையளிப்பார். நாங்கள் அஹ்லுல்பைத்தினர். எங்களது பிள்ளைகள் தமது பெற்றோரிடமிருந்து அறிவு ஞானம் என்பவற்றை சம்பூரணமான முறையில் வாரிசாகப் பெற்றுக் கொள்கின்றார்கள்.' [12]

கயரானீ என்பவர் தனது தந்தையிடம் செவிமடுத்ததாகக் கூறுகின்றார், குராஸானில் நான் இமாம் றிழாவிடம் இருந்தேன். அவர்களிடம் ஒருவர், தங்களுக்கு ஏதாவது நடந்து விட்டால் நாம் யாரைப் பின்பற்ற வேண்டும்? என வினவினார்கள். அப்போது 'எனது மகனாகிய அபூஜஃபரைப் பின்பற்றுங்கள்' என பதிலளித்தார்கள்.

கேள்வி கேட்டவர் இமாம் ஜவாத் அவர்களின் வயதை நினைத்தார் போலும் இமாம் றிழா மேலும் கூறினார்கள், 'இவரை விடவும் வயது குறைந்தவராக இருக்கும் போதே ஹஸ்ரத் ஈஸாவை அல்லாஹ் நுபுவத்தைக் கொண்டு நபியாக அனுப்பியுள்ளான்.[13]

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் கூறுகின்றார், ஸப்வான் இப்னு யஹ்யா என்பவருடன் சேர்ந்து நான் இமாம் றிழா விடம் சென்றேன். இமாம் ஜவாதும் அங்கிருந்தார்கள். அப்போது அவர்களின் வயது மூன்றாக இருந்தது.

'தங்களுக்கு ஏதாவது நடந்தால் தங்களது பிரதிநிதி யார்?' என இமாமிடம் நாம் கேட்டோம்.

அதற்கு இமாம் அபூஜஃபரின் அவர்களின் பக்கம் நோக்கி சமிக்ஞை செய்து 'இதோ எனது மகன் இருக்கிறார் என்றார்கள்.'

'இந்த வயதில்?' என நாம் கேட்டோம்.

அதற்கு இமாம் 'அல்லாஹ் நபி ஈஸாவை (அலைஹிஸ் ஸலாம்) தனது அத்தாட்சியாக தேர்ந்தெடுத்த போது அவரின் வயது, இவரை விட குறைவானதாக இருந்தது' என பதிலளித்தார்கள்.[14]

## இமாமத்

இமாமத்தை அல்லாஹ் நல்லடியார்களில் பொருத்தமானவர்களுக்கு வழங்குகின்றான். அதில் வயது வித்தியாசம் பாராட்டப் படுவதில்லை நுபுவ்வத்தில் நாம் இதனை அவதானிக்கிறோம் தெய்வீக அம்சமாகிய நுபுவத்திலும் அவ்வாறே இமாமத்திலும் தெரிவு செய்யப் படுபவரின் வயது செல்வாக்குச் செலுத்துவதாகக் கருதுவது பிழையாகும். அல்லாஹ்விடமிருந்து வரும் தெய்வீகத்தன்மை வாய்ந்த உயர்ந்த விடயங்களை நாம் சாதாரண நடைமுறை விடயங்களோடு ஒப்பு நோக்க கூடாது...

உண்மையில் இப்பதவிகள் அல்லாஹ்வின் நாட்டத்துடன் இணைந்தவையாகும். அல்லாஹ் - தனது மட்டிட முடியாத அறிவின் மூலமாக- அவ்வுயர் நிலைக்குத் தகுதியானவர்களை தன் அடியார்களில் இனங்கண்டு அவர்களுக்கு அவற்றை வழங்குகிறான். சிலவேளைகளில், சில நலன்களைக் கருத்திற்கொண்டு, வயதில் குறைந்த ஒரு சிறுவருக்கு அனைத்து அறிவையும் வழங்கி, அவர் சிறுவராக இருக்கும் நிலையிலேயே அவரை நபியாக அனுப்பவோ, இமாமாக தெரிவு செய்யவோ அல்லாஹ் நாடுவது சாத்தியமானதே.

எனவே தான், இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் எட்டாவது அல்லது ஒன்பதாவது வயதில் அவ்வாறான உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

*முஅல்லா இப்னு முஹம்மத் கூறுகின்றார்,*

"இமாம் ரிழா அவர்களின் ஷஹாத்திற்குப் பிறகு இமாம ஜவாததைப் பற்றி எங்களின் நண்பர்களுக்கு கூற முற்பட்ட போது இமாம் சொன்னார்கள் 'முஅல்லாவே! அல்லாஹ்தஆலா நுபுவ்வத்தில் போலவே இமாமத்திலும் செயற் படுகின்றான் அதனால் தான் ஞானப் பேற்றை வழங்கினோம் என்று கூறுகின்றான்'. [15]

*முஹம்மத் இப்னு அம்மார் கூறுகின்றார்,*

நான் மதீனாவில் ஹஸரத்அலீ இப்னு ஸஃர் இப்னு முஹம்மதுடன் இரண்டு வருடம் இருந்தேன் அவர் சகோதரரிடம் கேட்டுக் கூறும் விடயங்களை நான் பதிவு செய்து வந்தேன்.

ஒருநாள், இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் நபிகளாரின் (ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி) பள்ளிவாசலுக்குள் நுழைந்தார். அதைக்கண்ணுற்ற அலீ இப்னு ஜஃபர், செருப்போ, சால்வாயோ இன்றி ஓடோடிச் சென்று அன்னாரின் கையை முத்தமிட்டு அவர்களைக் கண்ணியப்படத்தினார்கள்.

அப்போது இமாம் ஜவாத், 'எனது சிறிய தந்தையே! அல்லாஹ் தங்களுக்கு அருள் புரிவானாக, அமருங்கள்!' எனக் கூறினார்கள்.

அதற்கு அலீ இப்னு ஜஃபர், 'எனது தலைவரே! தாங்கள் நின்று கொண்டிருக்கும் போது எவ்வாறு என்னால் அமர முடியும்!' என்று கூறினார்.

பின்பு அலீ இப்னு ஜஃபர் தனது சபைக்கு வந்த போது, அவரது தோழர்கள் சற்று கண்டிக்கும் தோறணையில் 'நீங்கள் இமாமின் தந்தையின் சிறிய தந்தையாயிற்றே. ஏன் இவ்வாறு செய்யாதீர்கள்?' எனக் கேட்டார்கள்.

அதற்கு அவர் தமது தாடியைப் பிடித்தவராக 'வாயை மூடுங்கள். அல்லாஹ் இவ்வயோதிபனை தேர்ந்தெடுக்காது. இவ்வாலிபரைத்தான் இமாமத்திற்கு தகுதியானவராக ஆக்கியுள்ளான். அவருடைய சிறப்பை நான் எவ்வாறு நிராகரிப்பது? நீங்கள் கூறும் விடயத்தை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன். நான் அவருக்குப் பணியாளன் ஆவேன்' எனக் கூறினார்.[16]

உமர் இப்னு பரஜ் கூறுகின்றார் தைக்ரீஸ் நதிக்கு அருகாமையில் இருந்தோம் அப்போது, நான் இமாம் ஜவாதிடம் இந்த நதியில் இருக்கும் தண்ணீரின் அளவையும் நிறையையும் தாங்கள் நன்கு அறிந்து வைத்துள்ளதாக தங்களது நேசர்கள் கூறுகின்றனரே?' என வினவினேன். அதற்கு இமாம், 'இந்த அறிவை, அல்லாஹ் அவனது சிறியதொரு படைப்பாகிய கொசுவுக்கும் கொடுப்பதற்கு சக்தியள்ளவனா இல்லையா?' எனக் கேட்டார்கள்.

'நிச்சயமாக அவன் சக்தியுள்ளவன்' என நான் கூறினேன்.

அப்போது இமாம், 'அவனது படைப்பாகிய ஒரு கொசுவை விடவும் ஏனைய பலவற்றை விடவும் அல்லாஹ்விடத்தில் நான் மிகவும் சங்கை பொருந்தியவன்' என்று கூறினார்கள்.[17]

அலீ இப்னு ஹஸ்ஸான் அல்வாஸிதீ கூறுகின்றார், இமாம் ஜவாத் அவர்கள் இருக்கும் போது, நான் வெள்ளியிலான விளையாட்டுப் பொருள் ஒன்றை அவர்களுக்குக் கொண்டு வந்தேன், எனது தலைவர் அபூஜ ஃபர் அவர்களே! இதனைக் கொண்டு தாங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் அல்லவா?' எனக் கூறினேன்.

அவ்வேளையில் இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் சிலரின் கேள்விகளுக்கு விடையளித்துக் கொண்டிருந்தார்கள். சபை கலைந்ததும் தனிமையான இடம் ஒன்றிற்குச் சென்றார்கள். நானும் அவர்களை பின்தொடர்ந்து சென்றேன். இமாமுடன் பேசுவதற்கு அனுமதியை வேண்டிய போது அனுமதி கிடைத்தது. நான் உள்ளே நுழைந்தேன். முகமன் கூறினேன். பதிலுரைத்தார்கள் என்றாலும், அவர்களது முகத்தில் கோபம் தென்பட்டது. என்னை அமருமாறு பணிக்கவும் இல்லை.

நான் அருகில் நெருங்கி எனது கைகளிலுள்ளவற்றை அவர்கள் முன்னால் வைத்தேன். அப்போது இமாம் என்னைக் கோபத்துடன் பார்த்துவிட்டு அவற்றை தூக்கி வலது புறமாகவும் இடது புறமாகவும் எறிந்தார்கள்.

பிறகு அவர்கள், 'இதற்காகவா அல்லாஹ் என்னைப் படைத்தான்? நான் எங்கே? விளையாட்டு எங்கே?' எனக் கூறினார்கள். அந்நேரத்தில் நான் அவர்களிடம் எனது தவறுக்கு மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டேன். என்னை மன்னித்துக் கொண்டார்கள். அதன் பின்பே நான் விடைபெற்று வெளியே வந்தேன்.[18]

## நிகழ்த்திய அற்புதங்கள் சில

இமாம் றிழாவின் மரணத்திற்குப் பின், ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக, பக்தாத் மற்றும் ஏனைய நகரங்களைச் சேர்ந்த சட்டவல்லுனர்கள், மற்றும் உலமாக்கள் அடங்கிய சுமார் எண்பது பேர் மக்காவுக்குப் புறப்பட்டார்கள்.

இமாம் ஜவாதைச் சந்திப்பதற்காக மதீனாவுக்கு வந்தனர். இமாம் ஜ ஃபர் ஸாதிக்கின் காலியாக இருந்த வீட்டில் எல்லோரும் தங்கினார்கள் சிறுவராக இருந்த இமாம் ஜவாத் அங்கு வந்த போது, அங்கிருந்த முவ ஃப்பிக் என்பவர் இமாமை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தினார்.

அனைவரும் இமாமுக்கு மரியாதை செலுத்தும் முகமாக எழுந்து நின்று முகமன் கூறினார்கள். பின்னர் சபையோரை தமது கேள்விகளை முன்வைத்தார்கள். இமாம் மிக அழகிய முறையில் தெளிவாக பதிலுரைத்தார்கள். இமாமத்தின் அடையாளத்தை அவர்களில் கண்டனர். மிக்க ஆனந்தமடைந்தனர். இமாமைப் புகழ்ந்து. அவர்களுக்காக பிரார்த்தனையும் புரிந்தனர்.

அவர்களில் ஒருவரான இஸ்ஹாக் இப்னு இஸ்மாயீல் என்பவர் கூறுகின்றார்.

இமாமைச் சந்திக்கவென சென்ற போது மேற்படி கூட்டம் சென்ற போது அன்னாரிடம் கேட்பதற்கான பத்து கேள்விகளை நான் தயார் செய்தேன் அவற்றை ஒரு தாளில் குறித்துக் கொண்டேன்.

எனக்கு ஒரு மணப்பாரமும் இருந்தது. என் மனைவி அப்போது கருவுற்றிருந்தார். எனது கேள்விகளுக்கு இமாம் பதில் அளித்த பிறகு, கர்ப்பத்திலுள்ளது ஆணாகப் பிறக்க பிரார்த்திக்குமாறு இமாமைக் கோருவது என நினைத்துக் கொண்டேன். எல்லோரும் கேள்விகளைக் கேட்டு முடிந்த பிறகு நானும் என் குறிப்போடு கேள்விகளைக் கேட்பதற்கு முன்பே சென்றேன். இமாம் என்னைக் கண்டதும், 'அபூய.ஃகூபே! அவருக்கு அஹ்மத் என்று பெயரிடுவீராக!' எனக் கூறினார்கள்.

அதன் பிரகாரம் எனக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்க நான் அஹ்மத் என்று பெயரிட்டேன். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். சந்தேகமின்றி, அவர் பூமியில் அல்லாஹ்வின் அத்தாட்சியேயாவார். [19].

*இம்ரான் இப்னு முஹம்மத் அல் ஷ்அ கூறுகின்றார்.*

இமாம் ஜவாதிடம் சென்று, எனது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டபின், 'ஹஸனின் தாய் தங்களுக்கு ஸலாம் சொன்னார்கள். மேலும் தனது கபனுக்காக பயன்படுத்துவதற்காக தங்களிடம் ஆடையொன்றையும் அன்பளிப்பாக வாங்கி வருமாறு என்னிடம் வேண்டிக் கொண்டார்கள்' எனக் கூறினேன்.

இமாம் ஜவாத் 'அப்பெண்மணிக்கு அது இனிமேல் அவசியமில்லை' என்றார்கள்.

இமாம் கூறிய வார்த்தையின் அர்த்தம் புரியாதவனாக அவர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றேன்.

அதற்கு சுமார் பதின்மூன்று அல்லது பதினான்கு நாட்களுக்கு முன்பாக அப்பெண்மணி மரணித்து விட்டார் என்ற செய்தி பிறகு தான் கேள்விப்பட்டேன் [20]

அஹ்மத் இப்னு ஹதீத் கூறுகின்றார், ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்கு ஹாஜிகளின் ஒரு கூட்டத்துடன் நானும் புறப்பட்டேன். வழியில் வழிப்பறிக் கொள்ளையர்கள் எங்களது பொருட்களையெல்லாம் பறித்துச் சென்று விட்டனர்.

நாம் மதீனாவை அடைந்ததும் இமாம் ஜவாதிடம் நடந்ததைக் கூறினோம். அவர் எங்களை வீட்டக்கு அழைத்து ஒரு தொகை திர்ஹம்களை எங்களிடம் தந்து இழந்த பொருட்களின் அளவுக்கு பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்றார்கள்.

நானும் அவற்றை அவ்வாறே செய்தேன். இமாம் தந்த பணம் ஒவ்வொருவருக்கும் இழந்த அளவைக் கொடுத்த போது சரியாகத் தீர்ந்து விட்டது இமாம் கொடுத்ததில் ஒரு நாணயம் கூட கூடவோ, குறையவோ இருக்கவவில்லை.[21].

*முஹம்மத் இப்னு ஸஹ்ல் அல்கும்மீ கூறுகின்றார்,*

நான் மக்காவின் அருகாமையில் உள்ளவன். ஒரு முறை மதீனா சென்றேன். இமாம் ஜவாதிடம் அவரது ஆடையொன்றை கேட்க வேணடுமென விரும்பினேன்... இருப்பினும் மனம் அதற்கு உடன்படாததால் கேட்காமலே வந்துவிட்டேன்.

பின்னர் கடிதம் மூலம் அவர்களிடம் கேட்போம் என்று எண்ணினேன். பின்பு கடிதம் ஒன்றை எழுதினேன். இரு ரகஅத்துகள் தொழுதுவிட்டு நூறு தடவைகள் அல்லாஹ்விடம் இஸ்திகாராவுக்கு பிரார்த்தித்து விட்டு அதைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்குடன் மஸ்ஜிதுன் நபவியுள் நுழைந்தேன்.

எனினும் இஸ்திகாராவின் படி எழுத்து மூலம் கேட்பதும் நன்றாகப் படவில்லை. உடனே, கடிதத்தை கிழித்து வீசிவிட்டு மதீனாவை விட்டு வெளியே வந்தேன்.

அப்போது ஒரு தூதுவர் எனது பெயரை சொல்லி விசாரித்துக் கொண்டிருந்தார். அத்தூதுவரிடம் ஆடைப் பொட்டலம் ஒன்றும் இருந்தது. அவர் என்னிடம் வந்தார். என்னை அடையாளம் கண்ட அவர், 'இவற்றை உமது தலைவர் உமக்கு அனுப்பிவைத்தார்' என்றார். அவற்றைப் பிரித்துப் பார்த்த போது இரண்டு போர்வைகள் இருந்ததைக் கண்டேன். [22]

## கனி தரும் மரம்

கலீபா மஃமுன், இமாம் ஜவாதை பக்தாதுக்கு அழைத்து தனது மகளை அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார். எனினும், இமாம் பக்தாதில் தங்கியிருக்காமல் தமது மனைவியுடன் மீண்டும் மதீனாவுக்கே திரும்பி விட்டார்கள்.

திரும்பும் போது பக்தாத் நகருக்கு வெளியே வெகு தூரம் மக்கள் வந்து பிரியாவிடை கொடுத்தனர்...

வழியில் மஃரிப் தொழுகைக்கான நேரமாகிய போது, அவர்கள் ஒரு பழைய பள்ளிவாயலை வந்தடைந்தார்கள். மஃரிப் தொழுகையை நிறைவேற்றுவதற்காக இமாம் பள்ளியினுள் நுழைந்தார்கள். அந்த பள்ளிவாயலின் முற்றத்தில் காய்ந்து, இலைகள் உதிர்ந்த இலந்தை மரமொன்று இருந்தது, இமாம் தண்ணீர் கொண்டு வருமாறு பணித்து, அதனை அம்மரத்தின் அடிப்பாகத்தில் ஊற்றினார்கள்.

அம்மரமோ சிறிது காலத்தில் தளிர்விட்டு தளைத்து பழங்கள் பழுத்தது. மேலும், அவ்வருடம் முதல் பெரும் விளைச்சல்கலாயிற்று. [23]

ஷெய்க் முபீத் (ரஹ்) அவர்கள் பல வருடங்கள் கழித்து அவ்விடம் சென்ற போது அம்மரத்தைக் கண்டதாகவும் அதிலிருந்து பழங்களை அவர்கள் பறித்து உண்டதாகவும் அறிவித்துள்ளார்கள்.

## தந்தையின் மரணம்

உமையா இப்னு அலீ கூறுகின்றார்கள்.

நான் மதீனாவில் இமாம் ஜவாதிடமும். அதேநேரத்தில் குராஸானில் இமாம் றிழாவிடமும் அடிக்கடி போய்வருவேன். அவர்களது அஹ்லுல்பைத்தினரும், அவர்களது தந்தை வழி உறவினர்களும் அவர்களிடம் வந்து ஸலாம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் அடிமைப் பெண்ணை அழைத்து, 'மாத்தம் சோகத்தை நினைவு கூற தயாராகச் செல்லுங்கள்' என்று கூறினார்கள். அங்கிருந்தவர்கலெல்லாம் பிரிந்து செல்லும் போது, மாத்தம் யாருக்கு என்று நாம் கேட்டிருக்க வேண்டாமா? என அங்கலாய்த்தனர்.

மறுநாள் அதுபோன்றே இமாமவர்கள் சொன்னார்கள். அப்போது 'யாருக்காக மாத்தம் வைக்கிறீர்கள்? என கேட்டோம்.

அதற்கு இமாம், 'இப்பூமியிலுள்ளோரில் மிகச் சிறந்தவருக்கு' என பதிலளித்தார்கள்.

இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் முதலாவதாக சொன்ன தினத்தில் ஷஹீதாகிய செய்தியை சில நாட்கள் கழித்தே அறிந்து கொண்டோம்.[24]

*முஹம்மத் இப்னு அபுல்அலா அறிவிக்கின்றார்.*

யஹ்யா இப்னு அக்ஸம் என்பவர் சாமர்ரா பிரதேசத்தின் நீதிபதியாக கடமையாற்றினார். இவர் அஹ்லுல்பைத்தினரின் விரோதியாகவும் காணப்பட்டார். அவர் கூறுகிறார். இமாமோடு பல முறை வாதிட்டு மூக்குடைபட்டதாக.

ஒரு தினம் நான் நபிகளாரின் கப்ரை ஸியாரத் செய்து கொண்டிருக்கும் போது, இமாம் றிழாவின் புதல்வர்களும் ஸியாரத் செய்து கொண்டிருப்பதை கண்டு

அவர்களிடம், 'நான் உம்மிடம் கேள்விகள் கேட்க விரும்புகிறேன். ஆனால் வெட்கமாக இருக்கின்றது' என்றேன்.

அப்போது இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம், "நீர் கேட்க விரும்பும் கேள்விகளை நானே அறிவிக்கட்டுமா?' எனக் கேட்டுவிட்டு, 'நீர் இமாம் பற்றித் தானே கேட்க விரும்புகின்றீர்' என்றார்கள்.

'அல்லாஹ்வின் மீது ஆணையாக அதுவே எனது கேள்வியாகும்' என்று நான் கூறினேன்.

அவர்கள், 'இமாம் நான்தான்' என்றார்கள் .

அதற்கு ஆதாரம் என்ன? என்று நான் கேட்டேன்.

அப்போது அவர்களின் கையிலிருந்த தடி பேச ஆரம்பித்து பின்வருமாறு கூறியது, 'நிச்சயமாக எனது இமாம் அவர்களாகும். மேலும், இவர்களே அல்லாஹ்வின் ஹுஜ்ஜத் எனும் ஆதாரமுமாகும். ' [25]

## அயலாரை பாதுகாத்தல்

அலீ இப்னு ஜரீர் கூறுகின்றார். நான் இமாம் ஜவாத் அவர்களுடன் இருந்தேன். அப்போது ஆடு ஒன்று இமாமவர்களின் அயல்வீட்டுக்காரனுடைய வளவிற்குள் நுழைந்து விட்டது. அந்த அயலவரை ஆட்டு சொந்தக்காரர்கள் இமாமிடம் இழுத்து வந்து 'இவர் ஆட்டைத் திருடினார்' என்று சொன்னார்கள்.

'இவர் உங்களது ஆட்டைத் திருடவில்லை. வேறு ஒருவரின் வளவினுள் உமது ஆடு இருக்கின்றது' என்று கூறிய இமாம் ஆடு இருக்கும் இடத்தை சுட்டிக்காட்டி அயலவரை விடுவித்தார்கள்.

உடனே ஆட்டுச் சொந்தக்காரர்கள், இமாம் குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்று, அவ்வீட்டுக்காரரை வெளியில் இழுத்து தாக்கியும் உடைகளைக் கிழித்தும் இமாமிடம் அழைத்து வந்தனர். இதனைக் கண்ட இமாம், 'உங்களுக்கு நாசம் உண்டாகட்டும். நீங்கள் அநியாயம் செய்துவிட்டீர்கள். உங்களது ஆடு தானாகவே இவரின் வளவிற்குள் சென்றது அதனை இந்நபர் அறிந்திருக்கவில்லை' என்றார்கள்.

பின்பு இமாம் தாக்கப்பட்ட நபருக்கு ஆடை கிழிந்ததற்காகவும் அடிபட்டமைக்காகவும் நஷ்ட ஈடு கொடுத்தார்கள். [26]

## சிறையில் இருந்து விடுதலை

அலீ இப்னு காலித் அறிவிக்கின்றார். நான் சாமர்ராவில் இருந்தேன். ஷாம் நாட்டிலிருந்து கைது செய்யப்பட்ட ஒரு மனிதர் அங்குள்ள சிறைக்கு கொண்டுவரப் பட்டுள்ளதாக தகவல் கிடைத்தது. நான் சிறைக்கூடம் வந்து அங்கிருந்த காவலாளிகளிடம் கேட்டறிந்து அம்மனிதரை அடைந்தேன். அம்மனிதர் அறிவுள்ள ஒருவராகவும் ஞான விளக்கமுள்ளவராகவும் தென்பட்டார்.

நான் அம்மனிதரிடம் உமது கதையென்ன? எனக் கேட்டேன். அதற்கவர் கூறினார், ஷாம் பிரதேசத்தில், இமாம் ஹுஸைன் அவர்களின் தலை வைக்கப்பட்டதாக கூறப்படும் இடத்தில் நின்று அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருந்தேன். ஒரு நாளிரவு நான் திக்ரு செய்து கொண்டிருந்த வேளையில், எனக்கு முன்னால் ஒரு மனிதரைக் கண்டேன்.

அவர் என்னைப் பார்த்து, எழுந்து நில!;, எனப் பணித்தார். நான் எழுந்து நின்றேன். சிறிது தூரம் என்னை அவர் அழைத்துச் சென்றார். அப்போது நாங்கள் கூபா பள்ளிவாயலில் இருந்தோம்.

அப்போது அவர் என்னிடம் 'இவ்விடத்தைப் பற்றி அறிவீர்?' எனக் கேட்டார். 'ஆம் இது மஸ்ஜிதுல் கூபா' என நான் பதிலளித்தேன் அவர் அங்கு தொழுதார். நானும் தொழுதேன்.

பின்பு தொழுகை முடிந்ததும் மீண்டும் சிறிது தூரம் என்னை அழைத்துச் சென்றார். அப்போது நாங்கள் நபியவர்களின் மதீனா பள்ளிவாயலில் இருந்தோம். அவர் நபியின் மீது ஸலாவாத் சொன்னார். பின்பு தொழுதார். நானும் அவருடன் இணைந்து தொழுதேன்.

அதன் பின் அங்கிருந்து வெளியேறினார். நானும் அவருடன் வெளியேறினேன். இருவரும் சிறிது தூரம் நடந்தோம். அப்போது நாங்கள் மக்காவில் இருந்தோம். அவர் கஃபாவை தவாப் செய்தார். நானும் அவருடன் தவாப் செய்தேன். பின்பு அங்கிருந்து வெளியேறினார். நானும் அவரடன் சேர்ந்து நடந்தேன். அப்போது, ஷாம் நகரில் நான் ஆரம்பத்திலிருந்து அதே இடத்தில் நின்று கொண்டிருந்தேன்.

பிறகு அம்மனிதர் என் கண்களை விட்டும் மறைந்து போனார். நான் பார்த்த விடயங்களையிட்டு வியப்பிலாழ்ந்தவனாக நான் நின்றேன்.

அடுத்த வருடம் வந்த போது, அம்மனிதரைக் கண்டேன் அவருக்கு வாழ்த்து கூறினேன். அவர் என்னை அழைத்ததார். நான் அவருடைய அழைப்புக்கு பதிலளித்தேன்.

கடந்த வருடம் செய்தது போன்றே இம்முறையும் அவர் செய்தார். அம்மனிதர் என்னை விட்டுப் பிரிந்து செல்ல எத்தனித்த போது, நான் அவரிடம், 'நான் கண்ட இந்த அற்புதங்களை நிகழ்த்துவதற்கான சக்தியைத் தந்த அந்த உண்மையாளனின் பொருட்டினால் கேட்கிறேன், தாங்கள் யார்? எனக் கேட்டேன்.

அதற்கு அவர், 'நான் அபூதாலிபின் மகன் அலீ, அவரின் மகன் ஹுஸைன், அவரின் மகன் அலீ, அவரின் மகன் முஹம்மத், அவரின் மகன் ஜஃபர், அவரின் மகன் மூஸா, அவரின் மகன் அலீ, அவரின் மகன் முஹம்மத் தான் நானாகும்' என பதிலளித்தார்.

இவ்விடயத்தை நான் காணும் நபர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொண்டிருந்தேன். அப்துல் மலிக்குக்கு இச்செய்தி கிடைத்த போது, என்னைக் கைது செய்வதற்கு கூலிப்படைகளை அனுப்பி என்னை இரும்பு ஒன்றில் பிணைத்து ஈராக்கிற்கு அனுப்பி வைத்துவிட்டார்'

அக்கைதியின் கதையைக் கேட்ட நான், 'உங்களது கதையை நான் அரசர் அப்துல் மலிக்குக்கு தெரியப்படுத்துகின்றேன்' என்று கூறினேன். அவ்வாறே செய்யுங்கள்' என அவர் கூறினார். நான் நடந்தவற்றை விபரித்து முஹம்மது இப்னு அப்துல் மலிக் அரசருக்கு தெளிவான கடிதம் ஒன்றை எழுதினேன். ஆனாலும் அவர் அம்மடலை அவரது முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டு சொன்னார், அவர் கூறுவது போன்று ஒரே இரவில் அவரை ஷாமிலிருந்து கூபாவிற்கும் மக்காவிலிருந்து ஷாமிற்கும் அழைத்து சென்றவரிடமே போ! இச்சிறையிலிருந்து விடுதலையைப் பெற்றுத்தரச் சொல்லும்படியாக அம்மனிதரிடம் கூறும்'

அலீ இப்னு காலித் தொடர்ந்து கூறும் போது, அவரின் நிலைமையை அறிந்து நான் கவலைப்பட்டவனாக திரும்பிச் சென்றேன். மறுநாள் அதிகாலையில் நேரத்தோடு அவரின் நிலையை அறிவதற்காகவும் பொறுமையை கடைப்பிடித்துக் கொள்ளுமாறு ஆறுதல் சொல்வதற்காகவும் சென்ற போது, அங்கிருந்த காவலாளிகளும் படைகளும் தடுமாறியவர்களாக இருப்பதைக் கண்டேன். அப்போது சொன்னார்கள். 'அந்நபர் நேற்றிரவு சிறையிலிருந்து காணாமல் போய்விட்டார். அவரை பூமி விழுங்கிக் கொண்டதா? அல்லது பறவைகள் தூக்கிச் சென்றதா? எனத் தெரியாமலுள்ளது' [27]

அபூ ஸில்த் அல்ஹர்வீ கூறுகின்றார். இவர் இமாம் றிழா அவர்களின் நெருங்கிய தோழர்களில் ஒருவராகும். 'இமாம் றிழாவின் மரணத்திற்குப் பிறகு மஃமூனின் கட்டளைப்படி நான் சிறையில் அடைக்கப்பட்டேன். ஒரு வருடம் எனக்கு சிறை வாழ்வு மிகக் கடுமையாக இருந்தது. ஒருநாள் நடுநிசியில் எழுந்து தொழுதுவிட்டு அல்லாஹ்விடம் பிரார்த்தித்தேன். நபிகளாரின் குடும்பத்தினரையும்

ஞாபகப்படுத்தி அவர்களின் பொருட்டால் எனக்கு விடுதலை பெற்றுத் தருமாறும் இரைஞ்சினேன்.

துஆவை நான் முடிப்பதற்குள், இமாம் ஜவாத் அங்கு தோன்றி, 'அபூஸல்தே! உமது உள்ளம் நெருக்கடிக்குள்ளாகி விட்டது அல்லவா' என்றார்கள்.

நான், 'ஆம் நிச்சயமாக' எனக் கூறினேன்.

இமாம் என்னிடம், 'எழுந்திருங்கள்' என்று கூறி, அச்சிறையின் இரும்புக் கதவுகளில் கையால் அடித்து அதனை உடைத்து அங்கிருந்து என்னை வெளியாக்கினார்கள்.

அப்போது சிறைக் காவலர்களெல்லாம் என்னைப் பார்த்த வண்ணமிருந்தும் அவர்களால் எதுவும் பேசமுடியவில்லை. நான் சிறையிலிருந்து வெளியேறினேன்.

இமாம் என்னைப் பார்த்து, நீர் விடைபெற்றுச் செல்வீராக. உம்மை யாராலும் பிடிக்க முடியாது' என்று கூறினார்கள். அபூ ஸல்த் சொல்கின்றார்கள். 'அன்றிலிருந்து இறுதி வரை ஒரு போதும் மஃமூனை நான் சந்திக்கவேயில்லை' [28]

## முஃதஸிமின் சபையில்

இப்னு அபூதாவூதின் நெருக்கமான நண்பராக இருந்த ஸர்காள் கூறுகின்றார். (இவர் இப்னு அபூதாவூத் கலீபா மஃமூன், முஃதஸம், வாஸிக், முதவக்கில் ஆகியோரின் காலத்தில் பக்தாதின் நீதிகதிகளில் ஒருவராக இருந்தவர்)

ஒரு நாள் இப்னு அபீதாவூத் முஃதஸிமின் சபையிலிருந்து திரும்பி வந்தார். மிகவும் சோர்வுற்றவராக இருந்த அவரிடம் அச்சோர்வுக்கான காரணம் பற்றி நான் வினவிய போது, அவர், 'இருபது வருடங்களுக்கு முன்பே நான் இருந்திருக்க வேண்டாமா? என இன்றைய தினம் நான் ஆசைப்பட்டேன்' என்று கூறினார்.

'ஏன் அவ்வாறு?' என நான் அவரிடம் கேட்டபோது, அவர் 'இன்று அமீருல் முஃமினீன் கலீபாவிடம் முஹம்மத் இப்னு அலீ வந்திருந்தார்' என்று கூறினார். 'அதனாலென்ன'? என நான் வினவினேன்.

*அவர் சொன்னார்:*

ஒரு திருடன், தான் திருடியதை ஏற்றுக் கொண்டுள்ளான். அவனுக்கு உரிய தண்டனையை நிறைவேற்றுமாறு கலீபா பணித்தார். இதற்கென மார்க்க

அறிஞர்கள் அச்சபையில் முஹம்மத் இப்னு அலீயும் அங்கு வந்திருந்தார் அக்கள்வனின் கையை எந்தளவிற்கு துண்டிக்க வேண்டும்? எனக் கேட்டார். கலீபா 'விரல்களையும் மணிக்கட்டு வரை உள்ளடக்கிய பகுதியை வெட்ட வேண்டுமென்று நான் கூறினேன். ஆதாரம் என்னவென அவர் கேட்டார். நான் கூறினேன் கையென்பது விரல் நுனியில் இருந்து மணிக்கட்டு வரையான பகுதியைக் குறிக்கும் தயம்மமின் வசனங்களும் அதனையே குறிப்பிடுகின்றது. 'உங்களது முகங்களையும் கைகளையும் தடவிக்கொள்ளுங்கள்' [29]

ஒரு சாரார் எனது இக்கருத்துடன் உடன்பட்டனர். வேறு சிலரோ, இல்லை, முழங்கையிலிருந்தே துண்டிக்கப்பட வேண்டுமெனக் கூறினர்.

ஏனெனில், அல்லாஹ் வுழு பற்றிக் கூறம் போது, 'உங்களது முகங்களையும் முழங்கை வரை கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள்'[30] என்று கூறியுள்ளான். வுழுவிலோ கையினுடைய அளவு என்பது, முழங்கை வரையுமாகும் என்று கூறினர்.

பின்னர் கலீபா அவர்கள், முஹம்மத் இப்னு அலீயிடம் திரும்பி, 'அபூஜஃபரே! இது பற்றி தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?' எனக் கேட்டார். அதற்கு இமாம் ஜவாத் 'கலீபா அவர்களே! அறிஞர்கள் தான் சொல்லி விட்டார்களே என்று கூறி நழுவினார்.'

அதற்கு கலீபா, 'அவர்கள் சொன்னதை விட்டுவிடுங்கள். உங்கள் கருத்து என்ன? நான் அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டுக் கூறுகின்றேன் நீங்கள் சொல்லித் தான் ஆகவேண்டும்' என்று வலியுறுத்தினார்..

இமாம் கூறினார்கள், 'நீங்கள் சத்தியம் செய்ததன் காரணமாக நான் கூறுகின்றேன். நிச்சயமாக இவர்கள் அனைவரும் நபிகளாரின் வழிமுறைக்கு மாறு செய்து விட்டனர். விரல்கள் ஆரம்பிக்கும் இடம் வரையே துண்டிக்கப்பட வேண்டும். முழங்கையோ மணிக்கட்டோ கையல்ல'

'அதற்கு ஆதாரம் யாது? 'என கலீபா கேட்டார். இமாம், 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி கூறியுள்ளார்கள், 'ஏழு உறுப்புகள் மீது சுஜுது அமைய வேண்டும். அவையாவன முகம், இரு கைகள், முழங்கால், இரு கால்கள் ஆகியவையாகும். அவனின் கை முழுமையாகவோ, அல்லது முழங்கை வரைக்குமோ வெட்டப்படுமானால் சுஜுது செய்வதற்கு உறுப்பு ஒன்று இல்லாமல் போய் விடும்' என்று கூறிவிட்டு, 'நிச்சயமாக சுஜுது செய்யும் இடங்கள் அல்லாவுக்குரியவையாகும். மேலும் நீங்கள் அல்லாஹ்வுடன் வேறு ஒருவரை அழைக்காதீர்கள்' என்ற குர்ஆன் வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள். [31]

அதாவது, இவ்வேழு உறுப்புகளும் சுஜூதுக்குரியவையாகும். அல்லாஹ்வுக்குரியதை வெட்டக்கூடாது என்பதே இதன் கருத்தாகும்.

இமாமின் தீர்ப்பை கலீபா சரி கண்டார். திருடனின் கைவிரல்களை மட்டும் பெருவிரல் தவிர்த்து துண்டிக்குமாறு மு∴தஸிம் கட்டளையிட்டார்.

இப்னு அபீதாவூத் கூறுகிறார். இவ்விடயம் என்னை மிகவும் பாதித்து விட்டது. மறுமை உண்டாகி விட்டது போல் உள்ளது. இவ்விடயத்தை கண்ணுறுவதற்கா நான் இவ்வளவு உயிரோடிருந்தேன் எனத் தோன்றியது.[32]

## திருமணத்தில் சதி

கலீபா ம∴மூன், அஹ்லுல்பைத்தினரை நேசிப்பதாகக் காட்டிக் கொள்ள முனைந்த சங்கதி பற்றி இமாம் றிழாவின் வாழ்க்கை வரலாற்றை விபரிக்கும் போது கூறினோம் சமூக கொந்தளிப்பைக் கட்டுப்படுத்தவும் அலவீக்களின் புரட்சியை திசைதிருப்புவதற்கும், ஷீஆக்களினதும் ஈரானியர்களினதும் ஆதரவைத் திரட்டவுமாக இமாம் றிழா மீது வாரிசுப் பதவியைத் திணித்த கதை தெரிந்ததே. இமாமை தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதும் அவரது நோக்கங்களில் பிரதானமானதாக இருந்தது.

மற்றொருபுறம், அப்பாசியர் ம∴மூனின் செயலையிட்டு ஆத்திரமடைந்தனர். இதனால் அப்பாசியரிடமுள்ள ஆட்சியதிகாரம் அலவீக்களின் கைகளுக்குச் சென்றுவிடுமோ என்று அச்சம் கொண்டனர். அதனால் ம∴மூனுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஆனால் இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் ம∴மூனால் நஞ்சூட்டப்பட்டு ஷஹீதாக்கப்பட்டபோது, அவர்கள் அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டதோடு, ம∴மூனுடைய ஆட்சியையும் ஏற்றுக் கொண்டனர்

கலீபா ம∴மூன், தான் இமாம் றிழாவுக்கு நஞ்சூட்டிய செய்தி வெளிவராமல் பாதுகாப்பதில் மும்முரமாக மிகக் கவனமாக இருந்தார். இதனடிப்படையில் கவலையும், சோகமும் கொண்டவர் போல், மூன்று நாட்களை வெறும் ரொட்டியையும் உப்பையும் உண்டவராக, இமாம் றிழாவின் கப்றுக்கு அருகாமையில் கழித்தார்.

எனினும், இம்மூடி மறைப்புகள், முகஸ்துதிகள் அனைத்துக்கும் அப்பால், தமது இமாமைக் கொலை செய்தவர் ம∴மூனைத் தவிர வேறு யாருமில்லை என்ற உண்மை அலவீகளுக்கு தெரியவந்தது. இதனால், அவர்களனைவரும் கடும் வேதனையும் வெறுப்புமடைந்தனர். மீண்டும் தனது ஆட்சியை ஆட்டங்காணச்

செய்யும் ஒரு புரட்சியை மஃமூன் எதிர்கொண்டார். இதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் காப்பாற்றிக் கொள்ளவும் மற்றொரு முனைப்பில் ஈடுபட்டார்.

இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் மீது மாமூன் அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தினார். இதனை செயல் ரீதியாக நிரூபிப்பதற்காக தனது மகளை இமாமவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க முன்வந்தார். இந்த உறவு மூலமாக, இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் தோற்றுவித்த எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியும் எனக் கனவு கண்டார்.

இமாம் ஜவாதை தமது தந்தை மரணித்து ஒரு வருடத்தின் பின், மதீனாவிலிருந்து பக்தாதிற்கு அழைத்து வந்த மஃமூன், உம்முல் பழ்ல் என்ற தன் மகளை திருமணம் செய்து கொடுத்தார்.. இந்நிகழ்வு ஹிஜ்ரி 204ல் இடம்பெற்றது.

றய்யான் இப்னு ஷபீப் கூறுகிறார், இமாம் ஜவாதுக்கு கலீபா தனது மகளைத் திருமணம் செய்து கொடுப்பதை அறிந்து கொண்ட அப்பாசியர் மிகுந்த கோபமுற்றனர். கலீபா மீது வெறுப்புற்றனர். மேலும் தங்களது அதிகாரங்கள் யாவும் முடிந்து விடுமோ என அச்சமும் கொண்டனர்.

கலீபா மஃமூனின் நெருங்கிய குடும்பத்தினர் சிலர் ஒன்றுசேர்ந்து மஃமூனிடம் வந்து, 'றிழாவின் புதல்வருக்கு உங்களது மகளை திருமணம் செய்து கொடுப்பதென நீங்கள் எடுத்துள்ள தீர்மானத்தை நாம் எதிர்க்கின்றோம். மேலும், அல்லாஹ் நமக்கு வழங்கி கண்ணியப்படுத்தியுள்ள இந்த ஆட்சியும் அதிகாரமும் எம்மை விட்டும் அகன்றுபோய் விடுமோ என்றும் அஞ்சுகின்றோம். ஆண்டாண்டு காலமாக எமக்கும் அவர்களுக்கும் பகைமை உள்ளது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். மேலும், உங்களுக்கு முன்னிருந்த கலீபாக்களும் அவர்களை தூரப்படுத்தியும் மலினப்படுத்தியுமே வந்துள்ளனர். இதற்கு முன்னர் றிழாவுடன் நீங்கள் நடந்து கொண்ட முறை பற்றி நாங்கள் அதிருப்தி கொண்டிருந்தோம். எனினும் அல்லாஹ் நாம் கைசேதப்படும் நிலையிலிருந்து எம்மைப் பாதுகாத்தான். ஆகவே, றிழாவின் மகனுக்கு உங்களது மகளை திருமணம் முடித்துக் கொடுப்பதைத் தவிர்த்து, உங்களது குடும்பத்திலுள்ள வேறு தகுதியான மாப்பிள்ளைக்கு மணம் முடித்துக் கொடுக்கவும்' என்று கடுமையான முறையில் குறிப்பிட்டனர்.

கலீபா மஃமுன் அவர்களுக்குக் கூறினார், 'உங்களுக்கும் அபூதாலிபின் குடும்பத்திற்கும் பகைமையுண்டாவதற்கு காரணமானவர்கள் நீங்களே. உண்மையைச் சொல்வதென்றால், உங்களை விட அவர்களே உயர்ந்தவர்கள் எனக்கு முன்னிருந்த கலீபாக்கள் குடும்ப உறவைத் துண்டித்துவிடும்

நடவடிக்கைகளையே மேற்கொண்டனர். நான் அதிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

என்னிடமிருந்து கிலாபத்தை இமாம் றிழாவுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக நான் மேற்கொண்ட முயற்சிகள் குறித்து நான் எவ்வித கைசேதமும் கொள்ளவில்லை. இமாம் றிழாவிடம் கிலாபத்தைப் பொறுப்பெடுக்குமாறும் கேட்டேன். அதனை என்னிடமிருந்து கழற்றிவிட விரும்பினேன். அவர் அதனை மறுத்துவிட்டார். அல்லாஹ்வுடைய விடயம் குறித்தபடியே நடைபெறக்கூடியதாகும்.

அபூஜஃபர், தனது சிறு வயதிலேயே ஆச்சரியப்படத்தக்க வகையில் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியமையினாலேயே அவரை நான் இதற்குத் தெரிவு செய்தேன். மேலும், அபூஸஃபரிடமிருந்து நான் அறிந்தவைகளை ஏனைய மக்களும் அறிய வேண்டுமென ஆசைப்படுகிறேன்'

அப்பாசியர் கூறினார்கள், 'இந்த வாலிபர் உங்களுக்கு வழிகாட்டுவாரா? நிச்சயமாக அவர் ஞானமோ, மார்க்க விளக்கமோ அற்ற ஒரு சிறுவர்'

கலீபா மஃமூன் கூறினார், 'உங்களுக்கு அழிவு உண்டாகட்டும். நிச்சயமாக அவரைப் பற்றி உங்களை விட நான் நன்கறிந்தவன். நிச்சயமாக, அஹ்லுல்பைத்தினரின் அறிவு, அல்லாஹ்வின் புறத்திலிருந்தும், அவனது அன்பு, மெஞ்ஞானம் என்பவற்றிலிருந்தும் கிடைத்ததாகும். மார்க்க அறிவிலும், பூரணத்துவ எல்லையை விட்டும் சற்றும் குறைவு காணாத ஒழுக்க நெறிகளிலும் இவரின் பெற்றோர் குறைவிலா செல்வங்களாக விளங்கினர். நீங்கள் விரும்பினால் இமாம் ஜவாதை பரீட்சித்துப் பாருங்கள் அவரது நிலை பற்றி நான் விபரித்தது உங்களுக்குத் தெரியவரும்' என்று கூறினார்.

அதற்கு அப்பாசியர், அமீருல் முஃமினீன் அவர்களே! தாங்கள் சொல்லும் விதத்தில் அவரைப் பரீட்சிப்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். எனவே, நாம் கொண்டு வருவோம் அவர் கேட்கும் கேள்விகளுக்கு அபூஜஃபர் சரியான பதிலளித்தால் நாம் அவரை எதிர்க்கமாட்டோம். தங்களது தெரிவு சரியானது என்பது எல்லோருக்கும் தெரிந்து விடும். அவர் விடையளிக்க இயலாது போனால், அவரைப் பற்றி நீங்கள் பேசக்கூடாது' என கேட்டுக் கொண்டனர்.

கலீபா மஃமூனும் 'நீங்கள் விரும்பியது போலவே ஆகட்டும்' என்றார்.

இமாம் ஜவாதிடம் கேள்விகள் கேட்பதற்கு சரியான நபராக அப்பாசியர் யஹ்யா பின் அக்ஸமைத் என்பவரை தெரிவுசெய்தனர். அவர் அச்சமயம் கிலாபத்தின் பிரதம நீதியரசராக விளங்கினார். இமாமுக்கு விடை தெரியாத கேள்விகளை அவர் இமாமிடம் கேட்க வேண்டுமெனவும் அதற்கென பெறுமதியான பரிசில்கள்

தருவதாகவும் அவருக்கு வாக்களித்தனர். அதன்பின் கலீபா மஃமூனிடம் வந்த அப்பாசியர் விவாதத்தை நடாத்துவதற்குரிய தினம் ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர்.

அனைவரினதும் ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தினத்தில் எல்லோரும் அங்கு ஒன்றுகூடினர். அவர்களுடன் யஹ்யா பின் அக்ஸமும் வந்திருந்தார். இமாம் ஜவாதுக்கு விரிப்பொன்று விரிக்குமாறும் அதில் இரு தலையணைகளை வைக்குமாறும் கலீபா மஃமூன் கட்டளையிட்டார். இமாம் அங்கு சமுகமளிக்கும் போது அவர்களது வயது ஒன்பது வருடங்களும் சில மாதங்களுமாகும். அவர்கள் இரு தலையணைகளுக்கும் மத்தியில் அமர்ந்து கொண்டார்கள் அவர்களுக்கு முன்னிலையில் யஹ்யா இப்னு அக்ஸம் அமர்ந்தார். சபையோர் தமக்குரிய இடங்களில் அமர்ந்து கொண்டனர். கலீபா மஃமூன், இமாம் அபூஜஃபர் அமர்ந்திருந்த விரிப்பின் ஓரத்தில் அமர்ந்து கொண்டார்.

யஹ்யா இப்னு அக்ஸம், கலீபா மஃமூனிடம், 'நான் அபூஜஃபரிடம் கேள்விகள் கேட்பதற்கு அனுமதியுங்கள்' எனக் கேட்க, அதற்கு கலீபா, 'நீர் கேள்விகளை கேட்கலாம்' என்றார்.

பின்னர் இமாமை நோக்கி 'நான் தங்களுக்கு அர்ப்பணம், ஒரு மஸ்அலா பற்றி வினவ அனுமதிப்பீர்களா?' என வேண்டிய போது இமாம் 'நீர் விரும்பும் கேள்விகளை தாராளமாக என்னிடம் கேட்கலாம்' என்றார்கள்.

யஹ்யா இப்னு அக்ஸம் இமாமிடம், இஹ்ராம் உடையணிந்த ஒருவர் வேட்டையாடுவது பற்றி தாங்கள் என்ன கூறுவீர்கள்?' என வினவினார்.

இமாம் கேட்டார்கள் 'வேட்டையாடியது ஹரமுடைய எல்லையிலா அல்லது வெளியிலா? வேட்டையாடுவது தடுக்கப்பட்டுள்ளதை அறிந்து செய்தாரா? தவறுதலாகச் செய்தாரா? சுதந்திரமான நபரா? அல்லது அடிமையா? சிறியவரா? அல்லது பெரியவரா? வேட்டையாடுவதற்குப் புதியவரா? ஆரம்பித்தவராகவா? அல்லது வழமையான வேட்டைக்காரரா? வேட்டையாடப்படும் உயிர் பறவை இனமா? அல்லது வேறு இனமா? சிறிய பிராணியா? அல்லது பெரிய பிராணியா? வேட்டைக்காரன் தன் தவறை ஏற்கிறானா? அடம்பிடிக்கிறானா? இரவிலா? பகலிலா? இஹ்ராம் உடையணிந்தவராகவா? அல்லது ஹஜ்ஜுக்கு இஹ்ராம் அணிந்தவராகவா? இவர்களில் எவரைப் பற்றி நீர் என்னிடம் வினவுகின்றீர்?' எனக் கேட்டார்கள்.

யஹ்யா இப்னு அக்ஸம் தடுமாறிப் போனார். அவர் தனது தோல்வியை முகத்திலே காண்பித்துக் கொண்டதை சபையோர் அறிந்தனர்.

அப்போது கலீபா ம.:முன், 'இந்த மாபெரும் நி.:மத்தைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்' என்று கூறியவராக, தனது குடும்பத்தினரைப் பார்த்து, நீங்கள் வெறுத்தக் கொண்டிருந்தவரின் பெறுமதியை தற்போது அறிந்து கொண்டீர்கள் தானே? எனக் கேட்டார்.

பின், இமாமிடம் திரும்பி, 'அபூஜ.:பர் அவர்களே! எனது மகளை திருமணம் செய்து கொள்ள தங்களுக்கு சம்மதமா?' எனக் கேட்டார். இமாம் ஜவாத் அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள்.

'எவர் என்னை எதிர்த்தாலும் எனது மகளாகிய உம்முல்பழ்லை தங்களுக்கு மணமுடித்துத் தருவேன்' என்றார் கலீபா ம.:மூன்.

இமாம் அபூஜ.:பர் அலைஹிஸ் ஸலாம் பின்வரும் துஆவை ஓதினார்கள், 'அல்லாஹ்வின் அருளை ஏற்றுக் கொண்டவனாக, எல்லாப் புகழும் அவனுக்கே உரியன. அவனது ஏகத்துவத்துக்கு உளத்தூய்மையோடு பணித்தவணாக மனிதகுல தலைவராகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி மீதும், அவர்களது குடும்பத்தின் தூயவர்கள் மீதும் அல்லாஹ் ஸலவாத் சொல்வானாக.

அல்லாஹ், ஹலாலானவற்றையே அருளி ஹறாமானவற்றில் இருந்து பாதுகாக்கிறான். இதுவே மனிதர்கள் மீதான அல்லாஹ்வின் பெரும் கொடையாகும்.

அல்லாஹ் கூறுகின்றான், உங்களில் எவருக்கும் வாழ்க்கைத் துணையில்லாவிட்டால் அவர்களுக்குத் திருமணம் செய்து விடுங்கள்.உங்கள் அடிமைகளிலுள்ள நல்லோரான ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்துவிடுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் அல்லாஹ் தன்னுடைய அருளைக் கொண்டு அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பான். அல்லாஹ் மிக்க விசாலமானவனும் நன்கறிந்தோனும் ஆவான்.'

பின்பு, 'நிச்சயமாக முஹம்மத் இப்னு அலீ இப்னு மூஸா ஆகிய நான் அல்லாஹ்வின் அடியான் ம.:மூனின் புதல்வி உம்முல்பழ்லை திருமணம் பேசுகின்றான். அவருக்குரிய மஹர், எனது பாட்டி ஹஸ்ரத் பாத்திமாவுக்கு வழங்கப்பட்ட தொகையான ஐநூறு திர்ஹம்களாகும். கூறப்பட்ட இந்த மஹருக்கு இத்திருமணத்தை நடத்தி வைப்பீர்களா?' என இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் கேட்ட போது,

'ஆம் அபூஜ.:பரே! எனது மகள் உம்முல்பழ்லை, குறிப்பிடப்பட்ட மஹருக்கு தங்களுக்கு மணமுடித்துத் தந்தேன். இந்நிகாஹை தாங்கள் ஏற்றுக்

கொண்டீர்களா?' என வினவினார் மஃமூன் இமாம், 'அதனை நான் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தேன்' என்று கூறினார்கள்.

கலீபா மஃமூன், அங்கு சமுகமளித்திருந்த அதிகாரிகள், பொதுமக்கள் ஆகியோரை தத்ததுமது அந்தஸ்துக்குத் தகுந்தாற் போல் அமர்ந்து கொள்ளுமாறு பணித்தார். பின்பு, அவரது கட்டளையின்படி அவர்கள் அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது. வந்தவர்களுக்கு, அவரது அந்தஸ்துக்கு ஏற்றவாறு பரிசில்கள் வழங்கப்பட்டன.

சபையோர் கலைந்து சென்றதன்பின் ஒரு சிலர் மட்டும் இருந்தனர். இமாமைப் பார்த்து கலீபா மஃமூன், இஹ்ராம் அணிந்தவர் வேட்டையாடுவது பற்றி தங்களின் மார்க்கச் சட்டத்தைக் குறிப்பிடுவீர்களா? நாங்கள் அறிந்து பயன் பெறலாம் என வேண்டினர்.

அதற்கு உடன்பட்ட இமாம், அவ்விடயத்தை தெளிவாக விபரித்தார்கள். [33] மஃமூன் கூறினார் 'அபூஜஃபரே! ஆழகாகச் சொன்னீர்கள். அல்லாஹ் தங்களுக்கு நற்கூலி வழங்குவானாக. நீங்கள் விரும்பினால், யஹ்யா தங்களிடம் வினாத்தொடுத்தது போல், தாங்களும் அவரிடம் வினாத்தொடுக்கலாமே'

இமாம், யஹ்யாவிடம் 'கேள்வி கேட்கட்டுமா?' என வினவிய போது, 'விடை தெரிந்தால் சொல்வேன். இல்லையெனில் தங்களிடம் தான் அர்ப்பணம்' என்றார்.

'ஓர் ஆண்மகனுக்கு ஒரு பெண்ணைப் பார்ப்பது முற்பகலில் ஹராமாகிறது. நடுப்பகல் வந்த போது அவள் அவனுக்கு ஹலாலாகிறாள் சூரியன் உச்சியிலிருந்து நீங்கியவுடன் அவளைப் பார்ப்பது மீண்டும் ஹராமாகிறது. பின்னர் அஸருடைய நேரத்தில் அவள் ஹலாலாகிறாள். மேலும் சூரியன் மறைந்தவுடன் அவள் அவனுக்கு ஹராமாகி விடுகின்றாள். என்றாலும் இஷாவின் இறுதி நேரம் வந்தவுடன் அவள் மீண்டும் ஹலாலாகிறாள். நடுநிசியாகியவுடன் அவள் திரும்பவும் ஹராமாகி. சுபஹூடைய நேரம் உதயமானவுடன் அவள் ஹலாலாஹி விடுகின்றாள். இப்பெண்ணின் நிலையென்ன? எதன் மூலம் இவ்வாறு ஹராமாகி, ஹலாலாகி விடுகிறாள்? என இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் கேட்டார்கள்.

இக்கேள்வியைக் கேட்டவுடன் யஹ்யா இப்னு அக்ஸம், 'அல்லாஹ் மீது ஆணையாக, இக்கேள்விக்குரிய விடை எனக்குத் தெரியாது. தயவு செய்து நீங்களே சொல்லுங்கள்' எனக் கூறினார்.

*இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம்.*

'இது ஓர் அடிமைப் பெண்ணாகும். முற்பகலில் அவளை அந்நிய ஆண் பார்ப்பது ஹராமாகும். நடுப்பகலானதும் உரிமையாளனிடம் இருந்து அவளை வாங்கினான் இப்போது, அவள் அவனுக்கு ஹலாலாகும். மேலும் ளுஹருடைய நேரத்தில் அவளை அவன் விடுதலை செய்கிறான். அப்போது அவள் மீண்டும் அவனுக்கு ஹராமாகிறாள். அஸருடைய நேரம் வந்தபோது அவளை திருமணம் முடித்துக் கொண்டான். இப்போது அவள் ஹலாலாகிறாள். ஆனால் மஃரிபுடைய நேரம் ஆகிவிட்டபோது அவளை ழிஹார் எனப்படும் தாய்க்கு ஒப்பிடுகின்றான். அவள் மீண்டும் ஹராமாகிறாள் இஷாவுடைய நேரம் வந்த போது அதற்குரிய தண்டத்தை கொடுத்து பரிகாரம் செய்து கொள்கின்றான். அதன்படி அவள் ஹலாலாகிறாள். நடுநிசியான போது ஒரு தடவை தலாக் சொல்லுகின்றான். அப்போது அவள் ஹராமாகும். எனினும் சுபுஹுடைய நேரமாகிய போது அவளை மீட்டிக் கொண்டான். இப்போது அவள் அவனுக்கு ஹலாலாகும்' என விளக்கம் கொடுத்தார்கள்.

மஃமூன் தனது குடும்பத்தாரைப் பார்த்து 'உங்களில் எவராகிலும் இவ்வாறான கேள்விகளுக்கு விடையளிப்பாரா? அல்லது இவர்களைப் போன்று பேசவும் முடியுமா?' என கேட்டபோது, எவருமே கிடையாது' என அவர்கள் பதிலளித்தனர்.

அப்போது மஃமூன், 'நபியின் அஹ்லுல்பைத்தினர் இவ்வாறான சிறப்பின் மூலம் கண்ணியப்படுத்தப்பட்டுள்ளனர். பரிபூரணம் பெறுவதற்கு சிறிய வயது ஒன்றும் அவர்களுக்கு தடையல்ல எனக் கூறினார்.[34]

என்றாலும் கலீபா மஃமூன் அஹ்லுல்பைத் மீது பொய்யான அன்பை அரசியல் நோக்கத்திற்காகவே வெளிப்படுத்தி நாடகமாடினார். இந்தத் திருமணம் கூட அத்தகைய ஒன்றாகும். இதற்கு பல காரணங்களை நாம் குறிப்பிடலாம்.

1.இமாம் ஜவாதின் வீட்டுக்கு தனது மகளை அனுப்பியதன் மூலம் அங்குள்ள நிலைமைகளை வேவுபார்க்கவும் இமாமை நேரடியாகக் கண்காணிக்கவும் முடியும். (உண்மையில், மஃமூனின் மகளாரும் தந்தையின் தேவையை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப உளவுப் பணி செய்ததை வரலாறு தெளிவாகப் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.)

2.தனது மகளை மணமுடித்தக் கொடுத்து இமாம் சௌகரியமான ஆடம்பர வாழ்க்கையின் பக்கம் இழுத்து தீமை, மோசடி மற்றும் கேளிக்கைகளில் ஈடுபடுத்தலாம் என்பதும் அவரின் நோக்கமாகும். அதன் மூலம் இமாமுக்குரிய மரியாதையையும் அந்தஸ்தையும் போக்கி கேவலப்படுத்த முடியும் எனவும் எதிர்பார்த்தார்.

முஹம்மத் இப்னு றய்யான் கூறுகிறார். மஃமூன் சகல தந்திரங்களையும் இமாமை மயக்குவதற்கு பாவித்த போதும் இமாம் அவைகளுக்கு சற்றும் மனம் தளரவில்லை. மகாரிக் என அழைக்கப்படும் ஒரு மனிதரை மஃமூன் அழைத்தார். இவன் கடினமான குரலும் நீண்ட தாடியும் உடையவனாக இருந்தான். மஃமூனிடம், 'உங்களுக்கு உலகில் ஏதாவது தேவையிருந்தால் அவற்றை நிறைவேற்றித் தருகின்றேன்' என அவன் கூறினான்.

பின் இமாம் அபூஜஃபர் அவர்களுக்கு முன்னால் அமர்ந்து, மேளத்தில் தட்டி பெரும் சப்தத்துடன் அவன் பாட ஆரம்பித்த போது அவ்விடத்தில் இருந்த எல்லோரும் ஒன்று சேர்ந்து அவனின் இசையை ஆர்வத்துடன் கவனித்துக் கொண்டிருந்தனர்.

ஆனாலும், இமாம் அபூஜஃபர் அலைஹிஸ் ஸலாம் அவனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வலது இடது பக்கமாகவும் திரும்பவில்லை. இறுதியில் தலையை உயர்த்தி, அவனைப் பார்த்து, 'நீ அல்லாஹ்வைப் பயந்து கொள். என்றார்கள்.

அவனுடைய கையிலிருந்த தடியும் மேளமும் கீழே விழுந்தன. மரணிக்கும் வரை அவனின் கைகள் இயங்கவேயில்லை. [35]

3.இமாமுக்கு தனது மகளை திருமணம் முடித்துக் கொடுப்பதன் மூலம், அஹ்லுலபைத் மீது தனக்கு நேசம் இருப்பதாகக் காண்பித்து அலவீக்களின் எதிர்ப்பையும் சமாளித்து தடுத்துவிடலாம் என மஃமூன் நினைத்தார்.

4.அபூஜஃபர் மூலம் எனது மகளுக்கு குழந்தை பிறந்தால் அக்குழந்தை நபிகளாரினதும் ஹஸ்ரத் அலீயினதும் பரம்பரையில் ஒரு பேரனைப் பெற்றதாக பெருமிதமடையலாம் என மஃமூன் கூறிவந்தார்.[36]

ஆயினும், அவரின் பெருமிதம் பலிக்கவில்லை. அவரின் மகள் குழந்தைப் பாக்கியம் அற்ற பெண்ணாக இருந்தார். இமாம் ஜவாதுக்குப் பிறந்த அனைத்து குழந்தைகளும் சமானா என்ற பெண்மணி மூலம் பிறந்தவர்களாகும். பத்தாவது இமாம் அல் ஹாதி, மூஸா, ஹுஸைன், இம்ரான், பாத்திமா, கதிஜா, உம்முகுல்தூம், ஹகீமா) [37]

மஃமூன் இத்திருமணத்தை அரசியல் நோக்கத்தை பிரதிபலிக்கக் கூடியதாக மட்டுமே அமைத்துக் கொண்டார். இதன் மூலம் சௌகரியமான வாழ்வை இமாமுக்கு உருவாக்க வேண்டுமென்ற அவரின் விருப்பத்தை இமாம் நிராகரித்தார்கள். ஏனெனில், அவர்களின் குடும்பத்தினர் உலகிற்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்கள். அதனால் மஃமுனுடன் இருக்கும் போது பல இன்னல்களையும் துன்பங்களையும் தாங்கிக் கொண்டு வாழ்ந்தார்கள்.

*ஹுஸைன் அல் மகாரீ கூறுகிறார்.*

அபூஜஃபர் பக்தாதில் இருக்கும் போது அவரிடம் நுழைந்தேன். அவர்கள், என்ன வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாரோ அப்படியே இருந்தார்கள். 'இம்மனிதர் தனது நாட்டுக்கும் செல்லாது இங்கேயே இருக்கின்றார். அவரின் உணவு முறையும் என்னவென்று தெரியாது' என எனக்குள் நான் பேசிக்கொண்டேன்.

அப்போது அவர்கள் தமது தலையை உயர்த்தியவர்களாக சொன்னார்கள். 'யாஹுஸைன்! மணிக்கோதுமை ரொட்டியும், கரைந்த உப்பும் நபிகளாருக்கு விருப்பமானது போன்று எனக்கும் விருப்பமானதாகும்.' [38]

இதன் காரணமாக, இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் பக்தாதில் இருக்காமல் மனைவி உம்முபழ்லுடன் மதீனாவுக்குச் சென்றார்கள். ஹிஜ்ரி 220 வரைக்கும் வேறு பிரச்சினைகள் இன்றி அங்கேயே வாழ்ந்தார்கள்.

ஹிஜ்ரி 218ல் மஃமூன் மரணித்தார். அவரின் இடத்திற்கு மஃமூனின் சகோதரரான முஃதஸிம் நியமிக்கப்பட்டார்.

ஹிஜ்ரி 220ல் முஃதஸிம் இமாமை பக்தாதிற்கு வருமாறு தனது ஆட்சிக்கு பக்கபலமாக இருக்குமாறும் வேண்டுகோள் விடுத்து இமாமை தன் கண்காணிப்புக்குள் கொண்டு வந்தார். ஏனெனில், திருடனின் கையைத் துண்டித்தல் பற்றி சர்ச்சை முஃதஸிமின் சபையில் எழுந்த போது இமாம் தந்த பதிலால் முஃதஸிம் கவரப்பட்டமை பற்றி முன்னர் குறிப்பிட்டோம்.

சிலநாட்கள் கழிந்த பிறகு இப்னு அபூதாவூத், முஃதஸிமிடம் வந்தார் பொறாமை நிறைந்தவராகவும் கடும் சீற்றம் கொண்டவராகவும் அவர் காணப்பட்டார். 'நான் உங்களுக்கு நலவையே நாடுகிறேன், ஆகவே சில உபதேசங்களைப் புரிய விரும்புகிறேன், சில நாட்களுக்கு முன்பு நடந்த சம்பவம் உங்களது அட்சிக்கு உகந்ததல்ல. காரணம் அறிஞர்களும் உயர் அதிகாரிகளும் இருக்கும் சமயத்தில் அபூஜஃபருடைய தீர்ப்பை தாங்கள் சரிகண்டீர்கள். அபூஜஃபரைப் பற்றி அவர்தான் கலீபாவாக இருக்க தகுதியானவர் என பாதி சனங்கள் ஏற்றுக் கொண்டவர் என்றும் கருதுகின்றார் இது போதாது என்று அண்மைய தீர்ப்புச் சம்பவம் பற்றியும் மக்கள் பலவிதமாகக் கதைக்கின்றனர். ஏனெனில் அதவே ஷீயாக்களுக்கு பெரும் பலமாக மாறிவிட்டுள்ளது' எனக் கூறினார்.

இக்கருத்தால் முஃதஸிம் அச்சமுற்றார் இமாமைக் கொலை செய்வதற்கான முயற்சிகளில் இறங்கினார். ஈற்றில் இமாம் ஜவாத் அவர்கள் துல்கஃதா மாதத்தின் இறுதி நாளன்று ஹிஜ்ரி 220ல் நஞ்சூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

இமாமின் புனித உடல், பக்தாதிலுள்ள குறைஷிகளின் மையவாடியில் அவர்களின் பாட்டனார் இமாம் மூஸா அல் காழிம் அலைஹிஸ் ஸலாம் அடக்கம் செய்யப்பட்ட கப்றுக்கு அருகாமையில் அடக்கம் செய்யப்பட்டது.[39]

இவ்விரு இமாம்களும் அடக்கம் செய்யப் பட்டுள்ள இடம் காழிமைன் என்ற பெயரில் பிரபல்யம் பெற்றுள்ளது.. இன்று, உலகின் சகல பாகங்களிலிருந்தும் அவர்களைத் தரிசிப்பதற்காக இலட்சக் கணக்கான முஸ்லிம்கள் சென்று வருவதைக் காண முடிகின்றது.

## இமாம் ஜவாதின் சீடர்கள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் காட்டித் தந்த வழி முறையின் பிரகாரம் மனிதர்களைப் பயிற்றுவிப்பதிலும் அவர்களுக்கு போதிப்பதிலும் அதீ தீவிர கவனம் செலுத்தினர், எமது பரிசுத்த இமாம்களது அறிவுப் பணியை, பாரிய கல்வி நிலையங்களோடு ஒப்பிட முடியாது. கல்வி நிறுவனங்களோ குறிப்பிட்ட பாடத்திட்டத்துடன் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே செயற்படுகின்றன. அந்த வரையறைகளை மீறுவது கிடையாது.

எனினும் இமாம்களின் அறிவு மற்றும் வழிகாட்டல் பணிகளை மக்களுக்கு எந்த வேளையிலும் செய்து வந்தனர். தம்மிடம் கற்க வருபவருக்கு தமது சொல்லும் செயலும் தமது வாழ்வு நடைமுறைகளாளும் பாடம் புகட்டுபவர் அவரது பாசறையில் அமரும் பாக்கியம் பெற்ற எவரும், அன்னோரது அறிவிலிருந்தும் பண்பாட்டில் இருந்தும் உயரிய பாடங்களைக் கற்றனர்.

கேள்விகள் இருப்பின், அவற்றை வினவ, அவற்றுக்கான விடைகளையும் அவ் இமாம்களிடமிருந்து அவர் பெற்றுக் கொள்ள முடியும். அவர்களது கேள்விகள் வரையறுக்கப்பட்டதாக இருக்க வேண்டுமென்பதில்லை. தான் எதிர்நோக்கும் எப்பிரச்சனையானாலும் அவற்றுக்கான விடைகளை அவரது இமாம்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பொதுவாக இத்தகைய உயர்நிலையானது, நபிமார்கள் மற்றும் இமாம்களைத் தவிர்த்து மற்றெவருக்கும் இலகுவானதல்ல என்பது தெளிவான விடயமாகும். இப்பயிற்றுவிப்பின் பயன்பாடு, செழிப்பும் வளமும் மிக்கதாக இருப்பதும் இயல்பானதாகும்.

உமையா அப்பாசிய ஆட்சியாளர்கள், இப்பிரத்யேகமான விசேட அம்சங்களை மக்கள் அறிந்து கொள்வார்களானால் உண்மையான இமாம்களையும் தெய்வீகத் தலைவர்களையும் அவர்கள் புறத்தொதுக்கமாட்டார்கள் என்பதையும்,

இந்நிலையில் தாம் கொள்ளையடித்த ஆட்சி அதிகாரம் அழிந்து விடும் என்பதையும் தெளிவாக அறிந்திருந்தார்கள்.

எனவே, தம்மால் இயன்றவரை உண்மையான இஸ்லாமியத் தலைமைத்துவத்துடன் மக்கள் சுதந்திரமாக தொடர்பு கொள்ளாதிருப்பதற்கான அனைத்து பிரயத்தனங்களையும் மேற்கொண்டார்கள். கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் ஆட்சியைப் பொறுப்பேற்றிருந்த சில வருடங்களையும், உமையாக்களின் வீழ்ச்சியினதும், அப்பாசிய ஆட்சியின் ஸ்திரமற்ற ஆரம்ப நாட்களினும் ஸ்திரமற்ற நிலைமையும் இதற்கு விதிவிலக்கென கூறலாம். இமாம் பாக்கிர், இமாம் ஸாதிக் ஆகியோரின் அறிவுப் பணி இக்கால கட்டத்தில் சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதிகளில் மக்கள் இவ்விரு இமாம்களிடமிருந்தும் மிகவும் சுதந்திரமாக போதனைகளை பெற்றுக் கொண்டனர்.

இமாம் ஜஃபர் ஸாதிகின் மாணவர்களதும், அறிவிப்பாளர்களதும் எண்ணிக்கை சுமார் நான்காயிரமாகும். அதேவேளை, ஏனைய இமாம்களுடைய மாணவர்களதும் அறிவிப்பாளர்களதும் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தமை நாம் அவதானிக்க முடிகிறது.

இமாம் ஜவாதின் தோழர்களும் மாணவர்களும் அவர்களது ஹதீஸ் அறிவிப்பாளர்களும் சுமார் நூற்று பத்து நபர்களே இருந்தனர். இது, அவர்களது காலத்தில் அவர்களுடன் மக்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதில் இருந்த சிரமத்தை எடுத்தக் காட்டுவதாக அமைகின்றது.

இமாமவர்களது சிறிய தொகையான மாணவர்களில் பிராசிக்கும் சிலரை நாம் அடையாளம் காணலாம் உதாரணத்துக்கு சிலரைப் பற்றி நோக்குவோம்.

*1. அலீ இப்னு மஹ்ஸியார்.*

இவர் இமாம் ஜவாத் அவர்களுக்கு நெருக்கமானவரும் அவர்களின் பிரதிநிதிகளில் ஒருவராகவும் இருந்தார். மேலும் இமாம் றிழா, இமாம் ஹாதி ஆகியோரின் நெருங்கிய தோழராகவும் காணப்பட்டார்.

இவர் அதிக வணக்கத்தில் நீண்ட நேர சுஜூது செய்ததன் விளைவாக அவரின் நெற்றிப்பகுதியில் சுஜூதின் அடையாளம் காணப்பட்டது. சூரியன் உதயமானவுடன் சுஜூது செய்யும் அவர், முஸ்லிம்கள் ஆயிரம் பேருக்காகப் பிரார்த்தனை புரிந்து, தனக்குத் தேவையானவற்றை அவர்களுக்காகவும் பிரார்த்தித்த பின்பே தலையை உயர்த்துவார். [40]

அஹ்வாஸில் வாழ்ந்த இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். தனது நன்நம்பிக்கை, மற்றும் நல்லமல் என்பவற்றினால் மிகவும் உயர்ந்த அந்தஸ்தை அவர் பெற்றிருந்தார். அவருக்கு இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்.

'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால். வரைகிறேன் நண்பர் அலீயே உமக்கு அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. உம்மை சுவனத்தில் குடியமர்த்துவானாக. இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஏற்படக் கூடிய இழிவிலிருந்து உம்மைக் காப்பானாக. எம்மோடு உம்மையும் மீள எழுப்புவானாக அலீயே! நீர் உபதேசம், வழிபாடு, பணிவிடை, பிறரை மதித்தல், கடமைகளை நிறைவேற்றல் போன்றவற்றில் சிறப்புற்று விளங்குகின்றீர். உம்மைப் போன்ற ஒருவரை காணவில்லை என்று நான் கூறினால் அது உண்மையாகவே இருக்கும். அல்லாஹ் உம்மை ஜன்னதுல் பிர்தௌஸல் குடியிருக்கச் செய்வானாக. கோடை, மாரி, இரவு, பகல், வேறுபாடின்றி நீர் ஆற்றி வரும் சேவைகளையும் உமது அந்தஸ்தையும் நாம் நன்கு அறிந்து வைத்துள்ளோம்.. அல்லாஹ் கியாமத்தில் படைப்புகளை ஒன்று சேர்க்கும் போது உம்மை அவனது தனித்தவமான நேசராக்க வேண்டுமென அவனை நான் பிரார்த்திக்கிறேன். நிச்சயமாக அவன் பிரார்த்தனைகளை செவியோற்போனாவான்'[41]

### *2. அஹ்மத் இப்னு முஹம்மத் இப்னு அபூநஸ்ர் அல்பஸன்தீ.*

இவர் கூபாவாசி, இமாம் றிழா, இமாம் ஜவாத் ஆகிய இரு இமாம்களினதும் தோழராகவும் இவ்விரு இமாம்களிடமும் உயர்ந்த அந்தஸ்து பெற்றவராகவும் இருந்தார். பல நூற்களை எழுதியுள்ளார். அவற்றில் முக்கியமானது 'அல்ஜாம்உ' என அழைக்கப்படும் கிரந்தமாகும். அஹ்லுல்பைத் மத்ஹபின் அனைத்து மார்க்க அறிஞர்களும் இவரது அறிவைப் பரிபூரணமாக அங்கீகரத்ததோடு அவரது றிவாயத்துக்களில் எவ்வித சந்தேகமும் கொள்வதில்லை. [42]

இவர் இமாம் றிழாவைத் தரிசிக்கச் சென்ற இமாம் இவர் மீது பிரத்தியேகமான அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்..

### *3. ஸகரிய்யா இப்னு ஆதம்.*

இவர் ஈரான் நாட்டின் கும் என்ற பிரதேசத்தை சேர்ந்தவராவார். இவரது சியாரம் கும் பிரதேசத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றதாகும். இவர் இமாம் றிழா, மற்றும் இமாம் ஜவாத் ஆகியோரின் நெருங்கிய தோழராக இருந்தார். இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் இவருக்காகப் பிரார்த்தித்துள்ளதோடு, தமது நெருங்கிய தோழர்களில் ஒருவராகவும் அவரைக் கணிப்பிட்டுள்ளார்கள். [43]

ஒரு சந்தர்ப்பத்தில் அவரை சந்தித்த இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் அவருடன் இரவின் ஆரம்பம் தொடக்கம் மறுநாள் காலைவரை தனிமையாக இருந்து மார்க்க விடயங்கள் பற்றி உரையாடினார்கள்.[44].

ஒரு நாள் இமாம் றிழாவிடம் ஒரு மனிதர் வந்து 'எனது வீடு தூரமாக இருப்பதனால் எல்லா நேரங்களிலும் உங்களை வந்து சந்திப்பது கஷ்டமாகவுள்ளது. எனவே எவரிடம் நான் மார்க்க விடயங்களை அறியலாம் எனக் கூறுங்கள்?' எனக் கேட்டார்.

அதற்கு இமாம் றிழா அவர்கள் ஸகரிய்யா இப்னு ஆதம் அல்கும்மீயிடம் நீர் அறிந்து கொள்ளலாம். ஏனெனில் அவர் மார்க்கப் பற்றிலும், உலகப் பற்றற்ற தன்மையிலும் உறுதியானவராக இருக்கிறார்' என்று கூறினார்கள். [45]

### *4. முஹம்மத் இப்னு இஸ்மாயீல் இப்னு பஸீகு.*

இமாம் காழிம் அலைஹிஸ் ஸலாம், இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம், இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் ஆகியோரின் தோழராக இருந்த இவர், அஹ்லுல்பைத் மத்ஹப் அறிஞர்கள் மத்தியில் மிகுந்த நம்பிக்கைக்குரிய ஒருவராகவும் கணிக்கப்படுகின்றார்.

இவர், பழக்கவழக்கங்களில் சிறந்த மனிதராகவும் வணக்க வழிபாடுடையவராகவும் விளங்கினார்.பல நூற்களையும் கோர்வை செய்துள்ளார். இவர் அப்பாசியரின் ஆட்சியிலும் பதவி வகித்த வண்ணமே இவற்றை செய்தார். [46]

இவர் அப்பாசிய ஆட்சியில் பதவி வகித்தமை பற்றி இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் இவ்வாறு கூறினார். 'அநியாயக் காரர்களின் அவையிலே இறைவன் அவனது ஜோதியால் ஒளிபெற்றுத் துலக்குவோரையும் அமர்த்தி விடுகிறான். அத்தகையோருக்குக் கிடைக்கும் அதிகாரத்தை வைத்து தம் நேசர்களைப் பாதுகாக்கிறான், முஸ்லிம்களின் விவகாரங்களை நெறிப்படுத்துகிறான். துன்பம் வரும் போது விசுவாசிகள் அவரை நாடுவர். அநியாய ஆட்சியில் விசுவாசிகள் இவர்களிடமே அபயம் கோருவர். இவர்கள் உண்மை விசுவாசிகளே. பூமியில் இறைவன் விசுவாசமான ஏவலாளிகளாவர். மறுமையில் மக்களுக்கு ஒளியாகத் தெரிவர். பூமியில் உள்ளோருக்கு நட்சத்திரம் வானத்தில் மினுங்குவது போல, வானுலகத்தாருக்கு இவர்களது ஜோதி இலங்கும். சுவர்க்கம் இவர்களுக்காகவும் இவர்கள் சுவர்க்கத்துக்காகவும் படைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு சோபனம் உண்டாகட்டும். உங்களில் எவரும் விரும்பினால் இந்த அந்தஸ்தை அடைய முடியாமல் இல்லை.

முஹம்மத் இப்னு இஸ்மாயீல் கேட்டார். அல்லாஹ் என்னை எதற்காக வைத்திருக்கின்றான், தலைவரே,

இமாம் றிழா அலைஹிஸ் ஸலாம் கூறினார், நீர் அவர்கலோடேயே இருந்து கொள்ளவும் இந்தப் பதவியைப் பயன் படுத்தி எமது நேசர்களின் உள்ளத்தைக் குளிர வைக்கிறீர்கள் அல்லவா அதனைப் பார்த்து நாமும் மகிழ்ச்சி அடைகின்றோம் நீங்கள் அவர்களுடேயே தொடர்ந்தும் இருங்கள்.[47]

*ஹுஸைன் இப்னு காலித் அஸ்ஸைரபீ கூறுகின்றார்.*

நாங்கள் இமாம் றிழா அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்கள் இப்னு இஸ்மாயீல் இப்னு பஸீஉவைப் பற்றி ஒருவர் ஞாபகப்படுத்தினார் இமாம் கூறினார்கள். 'உங்களிலும் அவரைப் போன்றவர்கள் உருவாக வேண்டுமென நான் விரும்புகிறேன்' [48]

*முஹம்மத் இப்னு அஹ்மத் இப்னு யஹ்யா கூறுகின்றார்*

'நான் மக்கா செல்லும் வழியில் உள்ள ஃபைத் எனும் இடத்தில் இருந்தேன். அப்போது முஹம்மத் இப்னு அலீ இப்னு பிலால் கூறினார். 'நாங்கள் முஹம்மத் இப்னு இஸ்மாயில் இப்னு பஸீஃ அடக்கம் செய்யப்பட்டிருந்த கப்ரை தரிசிக்கச் சென்றோம். அங்கு வந்த போது, கிப்லாவை முன்னோக்கியவாறு அவரது கப்றின் தலைப்பக்கமாக அமர்ந்து கொண்டு சொன்னார் இந்த கப்றிலே உறங்குபவர், தான் இமாம் அபூஜஃபர் பின்வருமாறு சொல்லக் கேட்டுள்ளதாக என்னிடம் கூறினார், ஒருவர், தனது சகோதரனின் கப்ரை தரிசித்து அவரின் கையை கப்ரின் மீது வைத்து சூரா கத்ரை (இன்னா அன்ஸல்னாஹு ஃபீ லய்லதில் கத்ரி) ஏழு தடவைகள் ஓதினால் மறுமையின் திடுக்கத்தில் இருந்து அச்சம் தீர்ந்தவராகி விடுவார்' எனக் கூறினார்.[49]

*முஹம்மத் இப்னு இஸ்மாயீல் இப்னு பஸீஃ கூறுகின்றார்*

'எனது கபன் உடைக்கெனத் இமாம் அபூஜஃபரிடம் அவர்களின் ஆடைகளில் ஒன்றை நான் கேட்டேன். அவற்றை எனக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது நான் அவர்களிடம் 'எப்படி இதனை நான் தயார் செய்வது? எனக் கேட்டேன். அதற்கவர்கள், 'அதன் கீழ்ப்பகுதியை அகற்றித் தயார் செய்யும்' என்றார்கள்.[50]

***மஃரூபுல் கர்ஹீ.***

அப்பாசிய கலீபா மன்சூர் தவானிகீ நிர்மாணித்த பக்தாத் நகரின் மேற்குப் புறத்தே அமைந்துள்ளது கர்ஹ் எனும் சிற்றூர். இவ்வூரைச் சேர்ந்தவர்கள் கர்ஹீ என அடைமொழியிட்டு அழைக்கப்படுகின்றனர். இமாம் ஜஃபர் ஜாதிக் அலைஹிஸ்

ஸலாம் காலம் தொடக்கம், இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் காலம் வரை இங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலானோர் அஹ்லுல்பைத்தினரை நேசிப்பதிலும் பின்பற்றுவதிலும் மிகவும் பிரபல்யம் பெற்றவர்களாக விளங்கினர்.

இமாம் றிழாவின் காலத்தில் இந்நிலை மேலும் சிறப்புற்றுக் காணப்பட்டது. கர்ஹ் நகரைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் இமாம் றிழாவிடம் கல்வி பயின்று, அவர்களது அன்புக்குரிய சீடர்களாக விளங்கினர்.

இமாமின் சீடர்களில் முக்கியமானவராகத் திகழ்ந்தவர் மஃரூபுல் கர்ஹீ ஆவார். இப்பிரபலம் பெற்ற மஃரூபுல் கர்ஹீயை இமாமின் புதல்வரெனவும் ஞானவாரிசெனவும் பிற்காலத்தில் சிலர் நம்பிக்கை கொள்ளக் காரணமாயிற்று.

எனினும், மஃரூபுல் கர்ஹீ, இமாம் றிழாவின் அறிவிப்பாளரும் மாணவரும் மட்டுமே. இமாம் றிழாவின் புதல்வராகவும் மெய்யான ஞானவாரிசாகவும் திகழ்ந்தார்கள் இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் அவர்கள். மஃரூபுல் கர்ஹீ அவர்கள் பிறந்த ஆண்டு பற்றிய தெளிவான வரலாற்றுச் சான்றுகள் இல்லை. எனினும் அவர்கள், ஹிஜ்ரி 200இல் அல்லது 201ல் வபாத்தாகினார்கள் என்பதற்கு சான்றுகள் உள்ளன.

இதன்படி ஹிஜ்ரி 195ல் பிறந்த இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் , ஐந்து அல்லது ஆறு வயதை எட்டியிருக்கும் நிலையில் மஃரூபுல் கர்ஹீ மரணித்துள்ளார்கள். ஆதலால் இருவருக்குமிடையே சந்திப்புகள் இடம்பெற்றிருப்பது பெரும்பாலும் சாத்தியமற்றதே. தவிரவும், இருவரும் சந்தித்துக் கொண்டதற்கான சான்றுகளும் காணப்படவில்லை.

எவ்வாறாயினும், இமாம் றிழாவின் புதல்வரும் உண்மையான ஞானவாரிசும் இமாம் ஜவாத் அலைஹிஸ் ஸலாம் அவர்களே என்பதையும், மஃரூபுல் கர்ஹீ அவர்கள், இமாம் றிழாவின் புதல்வராக அல்லாமல் அவர்களது மாணவராக மட்டுமே இருந்தார்கள் என்பதையும் உறுதியிட்டுக் கூற முடியும்.

## பொன்மொழிகள்

பரிசுத்த இமாம்களின் பேச்சுக்கள் அவர்களின் அறிவுச் சூரியனின் ஒளிக்கதிர்களாகும். அல்லாஹ்வின் அடியார்களுக்கான தெளிவான வழியைக் காட்டும் நம்பிக்கையான விளக்கமாகும்.

அன்னாரது மொழிகள் அனைத்து படித்தரங்களிலும் மனிதனின் பூரணத்துவத்தை பிரதிபலிப்பதாகவும் அவனின் இயல்பு நிலையைத் தட்டியெழுப்புவதாகவும்

எல்லாப் படித்தரத்துக்கும் அவனை அழைத்துச் செல்வதாகவும் காணப்படுகின்றன.

இமாம் ஜவாதின் பொன்மொழிகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

1.எவருக்கு அல்லாஹ்வே தன் தேவைகளுக்கு போதுமானவன் ஆகிறானோ மக்கள் தம் தேவைகளுக்காக அவரை நாடுவர். யார் அல்லாஹ்வை பயந்து நடக்கின்றாரோ அவரை எல்லா மனிதர்களும் நேசிப்பர்[51] (நூருல் அப்ஸார்)

2. அறிவே பரிபூரணம். [52]

3.தாம் வெறுப்பதை பிறருக்குச் செய்யாதிருப்பது ஒருவரது பரிபூரண மனிதத்தனமையைக் காட்டுவதாகும்.[53]

4.ஒரு விடயத்தை அடையும் முன்னர் அவசரப்படாதீர், சஞ்சலப்படுவீர். எதிர் பார்ப்புகள் நீண்டதாகி விடக்கூடாது. உங்கள் உள்ளங்கள் இறுகி விடும். உங்களில் பலவீனமானவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள் அவர்களுக்கு இரக்கம் காட்டுவதன் மூலம் அல்லாஹ்வின் றஹ்மத்தைத் தேடிக்கொள்ளுங்கள்.. [54]

5.மோசமானதை நல்லதெனக் காட்டுபவர், அதில் பங்குகொண்டவர் ஆகிறார்..[55]

6.அநியாயம் செய்பவனுக்கு அதற்கு உதவுபவனும் அதை அங்கீகரிப்பவனும் அதில் பங்காளியாவார்.[56].

7.யார் தனது சகோதரனை இரகசியமான முறையில் உபதேசிக்கின்றாரோ அவர் அவனை கௌரவிக்கிறார். எவர் பகிரங்கமாக உபயோகிக்கின்றாரோ அவர் அவனை இழந்து விட்டார்.[57]

8. உள்ளத்தில் இறைவனுக்காகவே என உறுதி கொள்வது, உறுப்புகளால் செய்யும் காரியங்களை விட சிறந்ததாகும்.[58]

9.அநியாயக்காரனுக்கு நியாயம் நிலை பெறும் நாளானது, அநியாயம் செய்யப்பட்டவனின் ஒடுக்கப்பட்ட நாளை விட மிகக் கடுமையானதாகும். [59]

10. முஸ்லிமுடைய ஏட்டின் விலாசம் அவனின் நற்குணமாகும்.[60]

11.மூன்று விடயங்கள் ஓர் அடியானை அல்லாஹ்வின் பொருத்தத்தின் பால் இட்டுச் செல்லும் அவையாவன, அதிக பாவமன்னிப்புத் தேடல், அயலாருடன் மென்மையாக நடத்தல்,அதிக தர்மம் செய்தல். மூன்று விடயங்களை வைத்துள்ளவர் கவலையடைய மாட்டார். அவசரமின்மை, ஆலோசனை செய்வது, தீர்மானிக்கும் போது அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பது. [61]

12. எவர் தீய விடயத்தை ஆசை கொள்கின்றாரோ, அவருக்கான தண்டனைகளில் மிகவும் குறைந்தது, வறுமையாகும்.[62]

13 எவர் அல்லாஹ் அல்லாதவற்றை துண்டித்து விடுகின்றாரோ, அவரை அல்லாஹ் பொறுப்பேற்றுக் கொள்கின்றான். எவர் தான் அறியாதவற்றின் அடிப்படையில் செயற்படுகிறாரோ சரி செய்வதை விட அதிகமாக சீரழிப்பார்.[63]

14.தர்மங்களைச் செய்வது, வறியவர்களை விட, தர்மம் செய்வோருக்கே அவசியமாகிறது. ஏனெனில் அதனால் கிடைக்கும் நற்கூலியும், பேறும் பெருமையும் அவர்களையே சேரும். தர்மம் எப்போதும் தன்னில் இருந்து தொடங்க வேண்டும்.[64].

15. வறுமைக்கு அழகு யாசிக்காதிருத்தல், செல்வத்துக்கு அழகு நன்றி சொல்லல், துன்பத்துக்கு அழகு பொறுமையாய் இருத்தல், பெருந்தன்மைக்கு அழகு பணிவாய் இருத்தல், பேச்சுக்கு அழகு சரளமான மொழிவளம், அறிவுக்கு அழகு ஞாபக சக்தி, ஞானத்தின் அழகு பணிவடக்கம், புத்தி சாதுர்யத்தின் அழகு நல்லொழுக்கம் , கொடையின் அழகு முகமலர்ச்சி, உதவி செய்வதன் அழகு நோவினை செய்யாமை, தொழுகையின் அழகு உள்ளச்சம், பேணுதலுக்கு அழகு சம்பந்த மில்லாததைக் கைவிடுவதாகும், [65]

16. எவர் அல்லாஹ்வின்பால் உறுதிபூண்டு நம்பிக்கை கொள்கின்றாரோ, அவரை அல்லாஹ் தீயவற்றில் இருந்தும் பகைவர்களிடமிருந்தும் பாதுகாப்பான். [66]

17.மார்க்கம் என்பது கண்ணியமாகும். அறிவு என்பது பொக்கிஷமாகும். மௌனம் என்பது ஒளியாகும். பித்அத்தைப் போன்று மார்க்கத்தை அழிப்பது வேறெதுவுமில்லை. பேராசையை விட மனிதர்களை அழிப்பது வேறெதுவுமில்லை. நல்ல மேய்ப்பாளனால் மந்தை சீர்பெறும். பிரார்த்தனையால் ஆபத்துக்கள் நீங்கிவிடும்.[67]

18. சோதனைகளின் போது பொறுமையாயிருப்பது, பிறரின் சோதனையைக் கண்டு குதுகலிப்பவனுக்கு பெரும் சோதனையாகும்.[68]

19.அல்லாஹ்வை தன் பாதுகாவலனாகக் கொண்டவன் எவ்வாறு வழிதவற முடியும்.[69]

20. இமாமி வஜல் என்பவர், 'எனக்கு சுருக்கமான, சகலதையும் உள்ளடக்கிய உபதேசம் ஒன்றை செய்யுங்கள்' என வேண்டினார். அதற்கான பதிலாக இமாம் குறிப்பிட்டார்கள்,உலகத்தில் இழிவில் இருந்தும் மறுமையில் நரகத்தில் இருந்தும் உன்னைக் காத்துக் கொள்.[70].

***வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.***

---

[1] சூரா மர்யம் 12

[2] சூரா மர்யம் 12 : 30

[3] அல் பிஹார் 50 : 15 உயூனில் முஃஜிஸாத் 107

[4] றமழான் மாத்ததில் பிறந்தார்கள் என்று ஓர் அறிவிப்பு உள்ளது.

[5] நபிகளாரின் மகன் ஹஸரத் இப்றாஹீம் ஹஸரத் மாரியதுல் கிப்தியா மூலம் பிறந்தார்கள்.

[6] அல் காபீ 1 : 323

[7] அல் காபீ 1 : 315

[8] அல் மனாகிப் 4 : 394

[9] அல் அன்வாருல் பஹிய்யா 125, அல் காபி 1 : 321 அல் இர்ஷாத் லில் முபீத் 299

[10] உயூனு அஹ்பாரிர் றிழா 2 : 216

[11] உயூனு அஹ்பாரிர் றிழா 2 : 216

[12] அல் காபீ 1 : 321 , அல் இர்ஷாத் லில் முபீத் 298

[13] அல் காபீ 1 : 322 , அல் இர்ஷாத் லில் முபீத் 299

[14] கிபாதுல் அதர் 324 , அல் பிஹார் 50 : 35

[15] அல் இர்ஷாத் லில் முபீத் 306

[16] அல் காபீ 1 : 322

[17] அல் பிஹார் 50 : 100 , உயூனுல் முஃஜிஸாத் 113

[18] தலாயிலுல் இமாமா 212 , அல் பிஹார் 50 : 59

[19] உயூனுல் முஃஜிஸாத் 109

[20] அல் பிஹார் 50 : 43 , ஹராயிஜுல் றவான்தீ 237

[21] அல் பிஹார் 50 : 44 , ஹராயிஜுல் றாவன்தீயில் இருந்து எடுக்கப் பட்டது.

[22] ஹறாயிஜுல் றாவான்தீ 237 , அல் பிஹார் 50 : 44

[23] நூருல் அப்ஸார் லில் ஷப்லன்ஜி 179, இஹ்காகுல் ஹக் 12 : 424 ,அல் காபீ 1 : 497 , இர்ஷாதுல் முபீத் 304 , அல் மனாகிப் 4 : 390

[24] அஃலாமுல் வரா 350

[25] அல் காபீ 1 : 353 அல் பஹாறஜ் 50 : 68

[26] அல் பிஹார் 50 : 47 ( ஹறாயிஜுல் றாவான்தீ ) ல் இருந்து மாற்றப்பட்டது

[27] இர்ஷாதுல் முபீத் 304 , அஃலாமுல் வரா 347 , இஹ்காகுல் ஹக் 12 : 427 , அல் புஸூலுல் முஹிம்மா 289

[28] முன்தஹல் ஆமால் , ஹயாதுல் இமாம் றிழா (அலை) 67, உயூனுல் அஹ்பாரிர் றிழா 2 : 247 , அல் பிஹார் 49 : 303

[29] சூரா அல் மாயிதா 5

[30] சூரா அல் மாயிதா 5

[31] சூரா அல் ஜின் 18

[32] தப்ஸீருல் அய்யாஸீ 1 : 319 அல் பிஹார் 50 : 5

[33] அல் இர்ஷாத் லில் முபீத் 299 , தபஸீருல் கும்மீ 169 , அல் இஹ்தியாஜு லித்தப்ரிஸி 245 , அல் பிஹார் 50 : 74 - 78

[34] அல் காபீ 1 : 494 , அல் பிஹார் 50 : 61

[35] தாரீஹுல் யஃகூபீ 2 : 454

[36] முன்தஹல் ஆமால் 2 : 235 துஹ்பதுல் அஷ்ஹறில் இருந்து எடுக்கப் பட்டது

[37] ஹறாயிஜுல் றவான்தி 208 , அல் பிஹார் 50 : 48

[38] இர்ஷாத் லில் முபீத் 307 , அஃலாமுல் வரா 338 , அல் பிஹார் 50 : 6

[39] றிஜால் ஷெய்கு தூஸி 142 - 342

[40] அல் குனா , அல் அல்காப் 1 : 424

[41] ஹய்பா ஷெய்ஹுத் தூஸீ 225 , அல் பிஹார் 50 : 105

[42] மு ஃஜமுர் றிஜாலுல் ஹதீத் 2 : 237 , றிஜாலுல் கஸ்ஸாயீ 558

[43] றிஜாலுல் கஸ்ஸீ 595

[44] முன்தஹல் ஆமால் ஹயாதுல் இமாம் றிழா (அலை) 85

[45] றிஜாலுல் கஸ்ஸீ 595

[46] றிஜாலுல் நஜ்ஜாஸீ 254

[47] றிஜாலுல் நஜ்ஜாஸீ 255

[48] றிஜாலுல் நஜ்ஜாஸீ 255

[49] றிஜாலுல் கஸ்ஸீ 564

[50] றிஜாலுல் கஸ்ஸீ 245 > 264

[51] நூருல் அப்ஸார் 180

[52] அல் புஸூலுல் முஹிம்மா 290

[53] நூருல் அப்ஸார் 180

[54] அல் புஸூலுல் முஹிம்மா 292

[55] நூருல் அப்ஸார் 180

[56] அல் புஸூலுல் முஹிம்மா 291

[57] நூருல் அப்ஸார் 180

[58] அல் புஸூலுல் முஹிம்மா 289

[59] அல் புஸூலுல் முஹிம்மா 291

[60] நூருல் அப்ஸார் 180

[61] அல் புஸூலுல் முஹிம்மா 291

[62] நூருல் அப்ஸார் 181

[63] அல் புஸூலுல் முஹிம்மா 289

[64] நூருல் அப்ஸார் 180

[65] அல் புஸூலுல் முஹிம்மா  291

[66] நூருல் அப்ஸார் 181

[67] அல் புஸூலுல் முஹிம்மா 290

[68] நூருல் அப்ஸார்  180

[69] அல் புஸூலுல் முஹிம்மா 289

[70] இஹ்காகுல் ஹக் 12 : 439 வஸீலதுல் மாலில் இருந்து திருப்பப் பட்டது.

இந்த நூலில் உள்ள அல் புசூலுல் முஹிம்மா,  நூருல் அப்ஸார் எனும் ஆதாரங்கள் இஹ்காகுல் ஹக் எனும் நூலிலிருந்து பெறப்பட்டவயே